1-11-54

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

5-NOV 1954

2 அணா

கேட்டீர்களா!

பிரெஞ்சு இந்தியா

சுமார் 250 வருஷங்களாக புதுச்சேரி, காரைக்கால், ஏனும், மாஹி சந்திரநாகூர் முதலிய இடங்களை ஆட்சி புரிந்து வந்த பிரெஞ்சுக்காரரின் ஆட்சி நவம்பர் 1-ஆம் தேதியுடன் முடிவடைகிறது. ஆட்சி நிர்வாகத்தை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்வார்கள். சந்திரநாகூர் ஏற்கனவே இந்திய யூனியனுடன் இணைந்துவிட்டது. எஞ்சியுள்ள பகுதிகள் நவம்பர் முதல் தேதியிலிருந்து நம் சர்க்கார் கைக்கு மாறுகின்றன. பிரெஞ்சிந்திய மக்களின் விடுதலைப் போராட்டத்தினாலேயே இந்த வெற்றி கிடைத்திருக்கிறது.

பறக்கும் தட்டுகள்

சென்னை, மதுரை முதலிய இடங்களில்கூட சமீபத்தில் பறக்கும் தட்டுகள் தென்பட்டனவாம். உலகெங்கிலும் இந்தத் தட்டுகள் பறப்பதாக அடிக்கடி செய்திகள் வந்துகொண்டிருந்தன. இப்போது தமிழ் நாட்டிலும் பறந்ததாகச் செய்திகள் கிடைக்கின்றன. பளிச் சென்று வட்டமாக இருக்கும் இந்தத் தட்டுகள் அதி வேகமாகச் செல்லுகின்றனவாம். இவற்றில் அந்நிய உலகத்தினர் வந்து உலவுவதாகச் சிலர் கூறுகின்றனர். இதையெல்லாம் நம்ப முடியாத போதிலும் பறக்கும் தட்டுகள் என்ன என்று இதுவரையிலும் கண்டு பிடிக்காமல் இருப்பது ஆச்சரியம்தான்.

மண்ணெண்ணெய் ரேடியோ

மின்சாரத்துக்குப் பதிலாக மண்ணெண்ணெயை உபயோகித்து ரேடியோ கேட்கலாம். இந்திய சர்க்கார் ரேடியோ ஆராய்ச்சி நிலையத்தார் இந்த முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். மின்சாரம் பரவாத கிராமங்களில்கூட மண்ணெண்ணெயை உபயோகித்து ரேடியோ கேட்கலாம் என்று தெரிகிறது.

ரபி அகமது கித்வாய்

இந்திய சர்க்கார் உணவு மந்திரியாக இருந்த ரபி அகமது கித்வாய் திடீரென்று தீபாவளியன்று காலமாகி விட்டார். 61 வயதான இவர் சிறந்த தேச பக்தர்; நிர்வாகி, நேருவுக்கு வலக்கரம் போல் இருந்தவர். தபால் இலாகாவில் இவர் செய்த புதிய ஏற்பாடுகள் எல்லோராலும் பாராட்டப் படுகின்றன. உள் நாட்டுத் தபால், ஆகாய விமான சர்விஸ், மொபைல் தபால் வண்டிகள், ஞாயிற்றுக்கிழமை விடுமுறை - ஆகிய புதுப் புது ஏற்பாடுகளை அமலுக்குக் கொண்டு வந்தவர் இவர் தான். உணவு இலாகாவை மேற்கொண்டதும் தேசமுழுவதும் திணறிக் கொண்டிருந்த உணவுக் கட்டுப்பாட்டை எடுத்தவரும் இவரே.

நோபெல் பரிசு

இந்த வருஷம் இலக்கியத்துக்காகக் கொடுக்கப்படும் நோபெல் பரிசு எர்னஸ்ட் ஹெமிங்வே என்ற அமெரிக்க ஆசிரியருக்குத் தரப் பட்டுள்ளது.

நேருவின் சீன விஜயம்

சீனாவுக்கு விஜயம் செய்து, சீனத் தலைவர் மா சே - துங்கையும் சீனப் பிரதம மந்திரி சூ என் - லாயையும் சந்தித்துப் பேசிய நேருவுக்கு சீன மக்கள் அமோகமான வரவேற்பளித்தார்கள். பன்னிரண்டு நாட்கள் சீனாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு நேரு நவம்பர் 1 - ஆம் தேதி கல்கத்தாவுக்குத் திரும்புகிறார்.

211794

கண்ணன்

5 NOV 1954 MADRAS

பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 21

1 - 11 - '54

குழந்தைகளே !	பக்கம்	2
லீடர் மணி	..	3
தூங்கும் அழகி	..	7
சிறிய வீடு	..	9
கேளுங்கள், சொல்கிறேன்!	..	10
துப்புத் துலங்கியது	..	13
மூன்று ஆடுகள்	..	19
சிறந்த நட்பு	..	24
கழக அங்கத்தினர்கள்	..	27
ஆயிரம் வீரர்கள்	..	29
சந்திரகிரிக் கோட்டை	..	33
எங்கள் பகுதி	..	39

கேட்டீர்களா! - 2-ஆவது அட்டை
கதிரவன் எங்கே-3-ஆவது அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4.-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.



"மாடிப் படியெல்லாம் டிராயராக இருக்கே?"

"எங்க அம்மா புடவைகளை வைக்க பீரோ, பெட்டிகள் எல்லாம் போதவில்லையாம். அதற்காக எங்க அப்பா செய்திருக்கும் ஏற்பாடு இது!"

குழந்தைகளே!

கண்ணன் தீபாவளி மலரைப் படித்து முடித்திருக்க மாட்டீர்கள். அதற்குள் இந்த இதழ் உங்களுக்கு வந்துவிடுகிறது. தீபாவளி மலரைப் பாராட்டிக் கடிதங்கள் வந்தவண்ணமாகவே இருக்கின்றன.

குழந்தைகள் மட்டுமா பாராட்டி எழுதுகிறார்கள்? இல்லை; பெரியவர்களும் ஆசிரியர்களும் எழுதிவருகிறார்கள். எழுத்தாளர்களும் பிரமுகர்களும் எழுதிவருகிறார்கள். இத்தனை நாள் நான் குழந்தைகள் மட்டும் தான் படிக்கிறார்கள் என்று எண்ணிவந்தேன். இப்பொழுதல்லவா உண்மை தெரிகிறது! "குழந்தைகளோடு பெரியவர்களும் படிப்பார்கள் போலிருக்கிறதே!" என்கிறார் நமது மதிப்புக்குரிய தலைவர் ராஜாஜி.

"உங்கள் கண்ணனைப் படிக்கும்போதெல்லாம் மீண்டும் குழந்தையாகிவிட மாட்டோமா என்று ஏக்கமாக இருக்கிறது" என்று ஒரு பிரமுகர் எழுதுகிறார். "உங்கள் பத்திரிகையை நாங்கள் படிக்கிறோமா, ஏன் எங்கள் பத்திரிகையைப் படிக்க வருகிறாய் என்று என் பெண் சண்டைக்கு வருகிறாள்" என்று எழுதுகிறாள் ஓர் அன்னை. இப்படி, சிறுவர் சிறுமியரோடு போட்டி போட்டுக்கொண்டு பெரியவர்களும் சின்னவர்களாக மாறிய விந்தையை நான் இப்போதுதான் கண்டேன். இவ்வளவுக்கும் கண்ணன் தீபாவளி மலர் காரணமாக இருப்பதை அறிந்து பெருமைப்படுகிறேன்.

இந்தத் தீபாவளி மலரினால் ஏற்பட்டுள்ள பல நன்மைகளோடு சில சங்கடங்களும் ஏற்பட்டுவிட்டன. "ஆசிரியர் அவர்களே! மலரில் தொடர்கதையை வெளியிட்டு எங்களை மோசம் செய்கிறீர்களே!" என்று உற்சாகமுள்ள குழந்தைகள் சிலர் வன்மையாக எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தொடர்கதைகளைக் கிழித்துச் சேர்த்து வைத்துக் கொள்ள முடியவில்லையே என்று கோபம். தொடர்கதைகளுக்காக மலரைக் கிழித்து நாசமாக்கிவிட அவர்கள் விரும்பவில்லை. இவர்களுடைய கோபம் மிகவும் நியாயமானதுதான் என்று உணருகிறேன். அதே சமயத்தில், "மலராக இருந்தாலும் மாணிக்கமாக இருந்தாலும் வழக்கமாக வருகிற தொடர்கதைகளைக் கட்டாயம் சேர்க்கவேண்டும். அந்தத் தொடர்ச்சியை ஒரு மாதம் வரையில் காத்திருந்து படிக்க முடியாது" என்று பல குழந்தைகள் முன்னாலேயே எழுதிவிட்டார்கள். இந்தத் தர்மசங்கடத்துக்கு என்ன செய்வது?

அதற்கு எப்படியோ ஒரு பரிகாரம் கண்டு பிடித்துவிட்டேன். இந்த இதழில் மலரில் வெளியான தொடர்கதைகள் அப்படியே மீண்டும் வெளியாகின்றன. மலர் கிடைக்காதவர்கள்கூட தொடர்கதையை விடாமல் சேர்த்துவிடலாம் அல்லவா? அதனோடு புதிதாக வெளிவரவேண்டிய பகுதியும் வருகிறது. மலர் வாங்கினவர்களுக்கும் மலர் கிடைக்காதவர்களுக்குமாகச் செய்துள்ள ஏற்பாடு இது. இப்பொழுது உங்களுக்குக் கோபமிராது என்று நம்புகிறேன். இந்த இதழில் இடமில்லாத காரணத்தினால் 'தூங்கும் அழகி' மட்டும் மலரில் வந்த அளவே வருகிறது.

தீபாவளி மலர் பற்றி எத்தனையோ சுவையான கடிதங்கள் வந்திருக்கின்றன; வந்துகொண்டும் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை அடுத்த இதழில் வெளியிடுகிறேன். 15-11-'54 இதழில் தீபாவளி மலர் பற்றிய விமரிசனம் எங்கள் பகுதியில் வெளியாகும். எல்லாரும் கலந்து கொள்ளலாம்.

—ஆசிரியர்.

மணியினால் ராமுவின் கொடிய குற்றச்சாட்டைப் பொறுக்க முடியவில்லை. அத்தையும் சிறிது தயங்கினாள். ஆனால் கையில் அகப்பட்ட சிட்டுக் குருவியை இம்சிப்பதுபோல ராமு மேலும் ஆத்திரத்துடன் குதித்தான். "என்னடா, நாடக மேடையல்லடா இது; ஒரேயடியாக நடிக்கிறாயே! நீ கொண்டுபோய் வைக்காமல் பூதம் கீதம் வந்து எடுத்துப் போய் உன் பெட்டி மேலே வச்சுதோ? உன் கை கிழிக்காமல் உங்க தாத்தா வந்து கிழிச்சுட்டுப் போனாரோ? எனக்கு அவமானமும் இடைஞ்சலும் பண்ணத் தானேடா நீ இந்த வீட்டுக்கு வந்திருக்கே! வேறு எதற்கு?" என்று நாடக மேடை 'வில்லன்' மாதிரி நரம்பு புடைக்கக் கத்தினான்.

இதற்குள் மணியின் மாமா வந்துவிடவே ஒரு கண நேரம் சத்தம் அடங்கியது. அவர், "என்னடா இங்கே?" என்று கேட்டுக்கொண்டே ஊஞ்சல் பக்கம் வந்தார். அத்தை உடனே எழுந்து, "ஏதோ புஸ்தகம் இரவல் வாங்கிக்கொண்டு வந்து ராமு வச்சிருந்தானாம். அதை மணி கிழிச்சு வச்சிருக்கான். புஸ்தகத்தை எடுத்தா ஒரு கை சும்மா இருக்காதோ?.. அதைக் கிழிப்பானேன், கேடு!" என்றாள்.

வெளியில் போய்விட்டு வந்ததுமே யாருக்கும் கலகலப்பாக இருந்தால்தானே பிடிக்கும்? சண்டையும் கூச்சலுமாக இருந்தால் எரிச்சல் வராமல் இருக்குமா? மாமாவுக்கு எரிச்சலும் கோபமும் தான் வந்தன.

"இங்கே வாடா, பயலே!" என்று மணியைக் கூப்பிட்டார்.

மணி அவர் அருகில் வந்து பயத்தோடு நின்றான்.

"புஸ்தகத்தை எடுத்தியா?"

"இல்லே மாமா. எனக்கு.. நான் எடுக்கவேயில்லை, மாமா!"

"பொய்" என்று ராமு கத்தினான்.

"எடுக்காமே உன் பெட்டிக்கு என்னமாடா வந்தது?" என்றாள் அத்தை.

மாமா மணியின் கையை எட்டிப் பிடித்துக்கொண்டார். "பயலே, பொய் வேறே சொல்றியா?" என்று கர்ஜித்தார். மணியோ நடு நடுங்கிப் போய் விட்டான். மாமாவுக்குக் கோபம் வந்து அவன் பார்த்ததேயில்லை. கோபம் வந்தால் என்ன செய்வாரோ என்றும் தெரியாது. அதனால் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு நின்றான்.

பொய் பேசுவதும், அதைச் சாதித்து ஜயித்துக்கொள்ள மாய் மாலம் செய்து அழுவதும்தானே உலகத்தில் பழக்கம்? அதைத் தான் மணியும் செய்கிறான் என்று மாமாவுக்குத் தோன்றியது. "நான் தெரியாமல் எடுத்து விட்டேன். கைத்தவறுதலாகக் கிழித்து விட்டேன்" என்று சும்மா ஒப்புக்கொண்டிருந்தால்கூட அவருக்குக் கோபம் வந்திராது.

"பயலே, பொய் சொன்னதும் இல்லாமே அழுது ஜயிக்கப் பாக்கிறியா? உம்.." என்று அடுத் துடையைப் பிடித்து ஒரு நிமிண்டு நிமிண்டினார்.

மணி ஓவென்று அழுதான்.

"இல்லே மாமா..பொய் சொல்றான் மாமா!" என்று அழுகையோடு சேர்ந்து கத்தினான்.

பளிச்சுப் பளிச்சு என்று கூடவே நாலு அடிகள் விழுந்தன.

"அஞ்சு ரூபாய்ப் புத்தகம், அப்பா!" என்று தணிந்தவரும் கோபத்தை, ராமு விசிறி விட்டான்.

மணிக்கு அடி வாங்கியது எல்லாம்கூடப் பெரிதாகவே படவில்லை. தீர விசாரிக்காமலே அடிக்க வந்துவிட்டாரே! 'இவர் பிள்ளையாக இருந்தால் இப்படிச் செய்வாரா?' என்ற எண்ணமே அவனை வாட்டி வதைத்து விட்டது. கோபம் என்று வந்து விட்டால் தன் பிள்ளை, பிறர் பிள்ளை எல்லாம் ஒன்றுதான் என்பது அவனுக்குத் தெரிய வில்லை.

மணி ரோசம் தாங்கமாட்டாமல், "என்ன மாமா, எனக்கு நாதியில்லை என்றுதானே இப்படி எல்லாருமாகச் சேர்ந்துகொண்டு என்னைக் கொல்லுகிறீர்கள்?" என்று தீவ்ரமான ஒரு பெரிய வார்த்தையைச் சொன்னான்.

'இத்தனையூண்டுப் பயலா இவ்வளவு பெரிய வார்த்தையைப் பேசுகிறான்!' என்ற அதிசயம் மாமாவையும் அத்தையையும் அதிர்ந்துபோகச் செய்துவிட்டது.

சற்று நேரம் பொறுத்து அத்தை மெதுவாக, "வீட்டிலே வைத்துக் கொள்ளவும் சாதம் போடவும் தான் சொந்தம்; பொல்லாத்தனத்தைக் கண்டிக்க நமக்குச் சொந்தம் இல்லையா? சிறிசா லட்சணமாகவா பேசுகிறான்! சே சே! இதெல்லாம் நமக்கு வீட்டில் வைத்துக் கொள்ள லாயக்கு இல்லை!" என்றாள்.

மணி சின்னப் பையன்தானே? அவனுக்கு உடனே இல்லாத பயமெல்லாம் வந்துவிட்டது. எல்லாரும் போன பிறகு அவன் சாப்பிடப் போகாமலே ஒரு மூலையில் உட்கார்ந்தான். இருட்டில் கையில் வைத்துக்கொண்டிருந்த புத்தகம் அதுதான் என்பது நிச்

சயமாகத் தெரிந்தது. ஆனால் அதை யார் அங்கே கொண்டுவந்து வைத்தார்கள்? அது எப்படி அவன் பெட்டிக்கு வந்தது? யாரோ அவனுக்கு விரோதமாக வேண்டுமென்றே செய்தது போல் இருந்தது அது. அதை நினைத்ததும் அவனுக்குத் தன் அம்மாவின் ஞாபகம் வந்தது. "அம்மா, என்னை இப்படி விட்டு விட்டுப் போய்விட்டாயே!' என்று நினைத்துக்கொண்டு தனியாக அழுதான். அழுகையை அடக்க மாட்டாமல் உடனே எழுந்து வெளியே போனான்.

வெளியில் நல்ல இருட்டு; குளிர்ந்த வாடை வேறு வீசியது. அந்த வாடைக் காற்று அவனுடைய எரியும் உள்ளத்துக்கு ஜிலுஜிலுவென்று இருந்தது. தயங்காமல் அவன் குமார் வீட்டை நோக்கிச் சென்றான். இந்த நேரத்தில் மணி அழைப்பதைக் கண்ட குமாருக்கு வியப்பாக இருந்தது.

ஆனால் நடந்ததையெல்லாம் மணியிடமிருந்து கேட்ட பிறகு, குமாருக்கு என்ன ஆறுதல் சொல்வது என்றே தெரியவில்லை.

"என்னை அடிச்சதுகூட எனக்கு வலிக்கல்லேடா! நான்தான் எடுத்துக் கிழிச்சேன் என்று எல்லாரும் விசாரிக்காமலே முடிவு கட்டி விட்டார்களேடா. நான் எடுக்கல்லேன்னு எப்படிடா ருசுப்படுத்துவேன்?" என்று மணி விக்கி விக்கிப் பொருமினான்.

"மணி, இதுக்கெல்லாம் வருத்தப்படாதே. இங்கேயே சாப்பிட்டு விடு. சாப்பிட்டு விட்டுப் பேசாமல் வீட்டுக்குப் போ. எல்லாம் சரியாகிவிடும்" என்றான் குமார். எவ்வளவோ வற்புறுத்தியும் மணி சாப்பிடாமல் வீடு திரும்பினான்.

அவன் மாமா அவனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். "எங்கேடா போனே? போய்ச் சாப்பிடடா, போ!" என்றார்.

"பசியில்லே, மாமா. நான் சாப்பிடவில்லே!" என்றான் மணி.

"அவன் இங்கே சாப்பிடுவானா? அவன் சிநேகிதன் குமார் வீட்டிலே சாப்பிட்டிருப்பான். எப்படிப் பசிக்கும் அவனுக்கு?" என்று நிந்தையாகச் சொல்லிவிட்டு, சாதம் போட வந்த அத்தை எல்லாவற்றையும் மூடி வைத்தாள்.

மணி படுக்கையில் படுத்துக்கொண்டு வேதனையால் துடித்தான். மனவேதனை வேறு; பசி வேதனை வேறு. கடிகாரம் ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரண்டு மணி அடித்துவிட்டது.

திடீரென்று தாழ்வாரத்தில் பேச்சுக் குரல் கேட்டது. "நான்தாண்டா எடுத்தேன். நான்தாம்பா எடுத்தேன்...அவன் எடுக்கல்லேடா! இனிமே நான் புஸ்தகத்தைக் கிழிக்கல்லேடா!" என்று கீச்சுக் குரலில் கமலா கத்துவது கேட்டது.

அத்தை எழுந்து, "என்னடி உளர்றே தூக்கத்திலே, கமலா? பேசாமல் தூங்கு!" என்று அவளைத் தட்டினாள்.

புத்தகத்தை எடுத்தது கமலாதான் என்பது தெரிய மணிக்கு அதிக நேரம் ஆகவில்லை.

ஓசையெல்லாம் அடங்கினதுமே அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாக, கதவை மெல்லத் திறந்தான். பழயபடி மூடிவிட்டு, தெருவில் இறங்கி நடந்தான். ஐந்து நிமிஷத்துக்குள் அவன் ஆற்றங்கரை ஓரமாகப் போகும் சாலைக்கு வந்துவிட்டான். அந்த இருட்டில் அந்தப் பாதை வழியே நடக்க யாருக்குமே பயமாகத்தான் இருக்கும். ஆனால் மணி இதையெல்லாம் பொருட்படுத்தினால்தானே?

ஆறு அந்த இருட்டில் எதையோ இழுத்துக் கொண்டு செல்வது போல் இருந்தது. ஆற்றங்கரையிலிருந்த நாணற் புதர்கள் 'ஹோய் ஹொய்' என்று பின்னணி கீதம் போல் இசைத்தன. கீரிப்பிள்ளையோ, மரநாயோ காலடிச் சத்தம் கேட்டு, சாலையில் குறுக்காக ஓடிச் சென்றது. 'கொடகொடா, கடகடா' என்று பச்சைத் தவளைகள் பயங்கரத்தை எழுப்பிக் கத்திக்கொண்டிருந்தன.

மணியின் உள்ளத்தில் இந்த நிகழ்ச்சிகள் ஒன்றும் ஒட்டவில்லை. அவன் நினைவு எல்லாம் அவனுக்கு முன்னால் மூங்கிலடியை நோக்கியே ஓடிக்கொண்டிருந்தன. சித்தியின் கோபச் சொற்களும் அப்பாவின் பரிதாபக் கோலமும் அவன் மனத் திரையில் எழுந்தன. (தொடரும்)

கதை: ஆர்வி

தூங்கும் அழகி

சித்திரம்: ஸாமி

ஹவற்ஹா! நீ அடிமை என்பது உனக்கே தெரியாதா! ஆனல் அவனல் இந்த இடத்தில் அடி எடுத்து வைக்க முடியாது!
நிச்சயமாகவா?
நீ பேசினயே! கல்லாக ஆனயா? இந்த இடத்தில் அவன் வித்தை யெல்லாம் பலிக்காது!
உன்னைப் பார்க்க ஆசையாக இருக்கிறது!
வேண்டாம்! அதற்குத் துணியாதே! வேண்டுமானல் நீ இங்கேயே இரு! உன்னைக் காப்பது என் பொறுப்பு!
இருட்டி விட்டதே நான் போக வேண்டும்!
நான் சொல்வதைத் தட்டாமல் இன்று இரவு இங்கு தங்கி விடு, பிறகு காலையில் பார்ப்போம்.
தனியாகவா நான் இருப்பது?
சொல்வதைத் தட்டாதே! இதோ, உனக்கு வேண்டிய பொருள்கள்!
ஆ! நீங்கள் எல்லாம் யார்? என்னுடன் பேசியது யார்?
அதைக் கேட்காதே! உனக்கு நன்மையே உண்டாகும்.
ருசி மிகுந்த உணவு உண்டதும் . . . . .
அழகாக இருக்கிறதே!
இங்கேயா வந்தாய்?
ஆ! அதோ ஜின் வருகிறதே! நான் என்ன செய்வேன்!
நான் என்ன செய்வேன்?
அங்கிருந்தபடியே குதித்து விடு! பயப்படாமல் குதி
தொடரும்

அறிஞர் ஒருவர் வீட்டைக் கட்டி
அடக்க மாக வாழ்ந்தனர்.
சிறிய வீடு என்று அதனைத்
தெருவில் சென்றோர் உரைத்தனர்.
அந்த அறிஞர் தம்மைத் தேடி
அன்று ஒருவர் வந்தனர்.
வந்த மனிதர் வீட்டைப் பார்த்து
வக்கணைகள் கூறினர்.
"முகப்பு சிறிதும் அழகா யில்லை.
முற்றம் குறுகி யுள்ளது.
சிவப்பு வர்ணம் அடித்தி ருந்தால்
சிறப்பு" என்றார், அத்துடன்.
"நண்பர் பலரும் கூடி வந்தால்
நன்க மர்ந்து பேசவே
சின்னஞ் சிறிய இந்த அறையில்
சிறிதும் வசதி இல்லையே!"
என்றே அவரும் சொன்ன வுடனே
இதனைக் கேட்ட அறிஞரும்
புன்சி ரிப்புச் சிரித்துக் கொண்டே
புகன்றார் அங்கே அவரிடம்:
"சின்ன அறையை நிரப்பும் அளவில்
சிறந்த நண்பர் கிடைத்திடின்
இன்பம் அடைவேன். ஆனால் அவர்கள்
எங்கே கிடைக்கப் போகிறார்?"

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

[இந்தப் பகுதியில் உங்கள் கேள்விகளுக்குப் பேராசிரியர் விஞ்ஞானம் பதில் சொல்ல வந்தாலும் வந்தார். ஒரே சயன்ஸ் பாடக் கேள்விகளாகவே வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. பெரும்பாலான கேள்விகளுக்குப் பாடப் புத்தகத்திலேயே பதில் கிடைக்குமே என்கிறார் விஞ்ஞானம். அதனால் உங்களைச் சுற்றியுள்ளவற்றைப் பாருங்கள்; இயற்கையையும் செயற்கையையும் கவனியுங்கள். எது உங்களுக்கு உண்மையில் புரியவில்லையோ, எதற்கு உங்களுக்குச் சரியான விடை கிடைக்கவில்லையோ, அந்த மாதிரிக் கேள்விகளாகக் கேளுங்கள். அதனால் எல்லாருக்குமே நன்மையுண்டு. ஆ—ர்]

வி. ரமணன், சென்னை-18.

எலெக்டிரான் மைக்கிராஸ்கோப் என்றால் என்ன? அது எப்படி வேலை செய்கிறது?

எலெக்டிரான் மைக்கிராஸ்கோப் என்பது பொருள்களைப் பெரிதாக்கிக் காட்டக் கூடிய கருவி. சாதாரண மைக்கிராஸ்கோப் ஒளிக்கிரணங்களின் மூலமாகப் பெரிதாக்கிக் காட்டுகிறது. எலெக்டிரான் மைக்கிரோஸ்கோப் எலெக்டிரான்களின் (மின்-அணுக்களின்) மூலமாகப் பெரிதாக்கிக் காட்டுகிறது,

பார்க்கப்படும் ஒரு பொருளின் மீது எலெக்டிரான் கற்றை ஒன்றை விழும்படி செய்தால், அந்தக் கற்றையிலுள்ள எலெக்டிரான்கள் அவை மோதும் பொருளின் பற்பல தன்மைகளுக்கு ஏற்றபடி பாதிக்கப்படுகின்றன. காந்த லென்சுகள் இந்த நிகழ்ச்சியைப் பெரிதாக்கி ஒரு திரையில் விழச் செய்கின்றன.

மிகச் சிறந்த எலெக்டிரான் மைக்கிராஸ்கோப் முப்பதினாயிரம் மடங்குப் பெரிதாக்கிக் காட்டும் பொருளை, இரண்டு லக்ஷம் மடங்குப் பெரிதாக்கிப் படம் பிடிக்கும்.

வி. மு. ரத்தினம், பெங்களூர்.

எனக்குத் திடீரென்று வழியில் போய்க்கொண்டிருக்கும் பொழுதே மூக்கில் ரத்தம் வந்து விடுகிறது. இந்த ரத்தம் வருவதற்குக் காரணம் என்ன?

இது ஒரு வியாதி அன்று. இது சற்றே அசாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சி. சிலருக்கு மட்டுமே இம் மாதிரியாகச் சில வேளைகளில் ஏற்படும். பின்பு தானாகவே நின்றுவிடும். இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நிற்காமல் போனால் நல்ல டாக்டரிடம் பார்க்கவேண்டியதுதான்.

கே. டி. எம். அப்துல் காதர், கீழக்கரை.

நாம் கறுப்பு நிறமாகவும், ஆங்கிலேயர்கள் வெள்ளை நிறமாகவும் இருப்பது ஏன்?

இதற்கு ஒரு காரணம் சீதோஷ்ண நிலை. வெப்ப நாடுகளில் வெயில் உறைப்பதால்

தோலின் உட்புறத்தில் கறுப்பு நிறப் பொருள் ஒன்று அதிக அளவில் உண்டாக்கப் படுகிறது. கறுப்பு நிறத்துக்கு இது ஒரு காரணம்.

பரம்பரை என்பது மற்றொரு காரணம். சாதாரணமாக, கறுப்பு நிறம் உள்ள தாய் தந்தையர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அவர்களைப் போலவே கறுப்பு நிறமுள்ளவைகளாயும், வெள்ளை நிறமுள்ள தாய் தந்தையர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் வெள்ளை நிறமாகவும் இருக்கும்.

ஏ. பாலகிருஷ்ணன், சேலம்.

நம் கண்ணுக்குச் சுமார் 5 மைல் வரைதான் பார்க்கும் சக்தி உண்டு என்கிறீர்களே, ஆனால் பல கோடி மைல்களுக்கு அப்பாலுள்ள நக்ஷத்திரங்களை நாம் எப்படிப் பார்க்கிறோம்?

நீ முதலில் சொன்னது சரிதானா என்று பார்ப்போம். ஐந்து மைல் தூரத்துக்கு அப்பால் உள்ள கொக்கை உன்னால் பார்க்க முடியுமா? முடியாது அல்லவா? ஆகையால், ஐந்து மைல் தூரத்தில் உள்ள பொருளைப் பார்க்க முடியும் என்பதும் சரியில்லை.

பொருள் போதிய அளவு பெரிதாக இருந்தால், ஐந்து மைல் தூரத்தில் அது இருந்தாலும் பார்க்க முடியும். அது ஒளி வீசும் பொருளாக இருந்து, அதன் ஒளி பிரகாசமாயும் இருந்தால்தான் ஐந்து மைல் தூரத்திலுள்ளவனுக்குத் தெரியும். ஒளி மங்கலாக இருந்தால் தெரியாது.

நக்ஷத்திரங்கள் மிக மிகப் பெரிய பொருள்கள். அவை மிக மிகப் பிரகாசமானவை. ஆனால், அவை மிகவும் அதிக தூரத்தில் இருப்பதால் அவை ஒளிப்புள்ளிகளைப் போல் தோன்றுகின்றன. போதிய அளவுப் பிரகாசம் இல்லாத கோடிக் கணக்கான நக்ஷத்திரங்களை நம்மால் வெறுங் கண்ணால் பார்க்க முடிவதில்லை.

என். ராகவன், மதுரை.

நம் தலையில் ஒரு நாளைக்கு எவ்வளவு நீளம் மயிர் வளர்கிறது?

நம்முடைய தலைமயிர், வளரும் வயதில், தினந்தோறும் ஓரங்குலத்தின் மிகச் சிறு பகுதி நீளமே சாதாரணமாக வளர்கிறது. ஒவ்வொருவருக்கும் ஓர் அளவு நீண்ட பிறகு அது மேலும் நீண்டு வளர்வதில்லை. ஆனால் அப்படி வளராமல் நின்றுபோன மயிரைக் கத்தரித்து விட்டால், அது முன் போல் தினம் சிறிது சிறிதாக வளர்ந்து நீளுகிறது. இந்த நீளம் சுமார் $\frac{1}{80}$ முதல் $\frac{1}{40}$ அங்குலம் வரை இருக்கலாம் என்று கணக்கிட்டுள்ளனர்.

நாற்பது நாளைக்கு ஓர் அங்குலமானால் 40 வருஷத்துக்கு எத்தனை அங்குலம் என்று பெருக்கல் கணக்கு போட்டுவிடக்கூடாது. போட்டால் கஜக் கணக்கில் தலைமயிரின் நீளம் வந்து விடும்.

சே. சுப்பையா, வளையாபட்டி.

மனிதனுக்கு முன்காலத்தில் வால் இருந்தது என்பதற்கு அத்தாட்சியாக நம் முதுகுத் தண்டின் கீழ் எலும்புகள் ஒன்றோடொன்று இணைந்து இருக்கின்றன என்று சிலர் கூறுகிறார்கள். இது உண்மையா? வேறு ஆதாரங்கள் இருக்கின்றனவா?

இப்பொழுதுள்ள மனிதனுடைய முதுகெலும்பைப் பார்த்தால், அதில் கீழக்கடைசியிலுள்ள பகுதியில் நாலு எலும்புகள் பறவையின் இறகு போல வளைந்திருப்பது தெரியும். இந்தப் பகுதிக்கு குத-எலும்பு என்று பெயர். மற்றப் பிராணிகளின் வால் எலும்புக்கு இவை ஈடானவை. பரிணாமக் கிர

மத்தில், மனிதன் படிப்படியாக உரு மாறி, நிலைமாறி, இயல்புகள் மாறி வளர்ந்து வந்திருக்கிறன். இந்தப்பரிணமத்தின் மிகப் பழமை யான படி ஒன்றில் மனித இனத் தின் மூதாதையான பிராணிக்கு வால் இருந்தது என்று விஞ்ஞானி கள் கூறுகிறுர்கள் என்பது உண்மை. அந்தப் பிராணிக்கு வால் இருந்தது என்பதற்கு வேறு ஆதாரங்களும் இருக்கின்றன.

சே. சுப்பையா, வளையாபட்டி.

இடது வெண்டிரிக்கிளிலிருந்து புறப்படும் சுத்த ரத்தம் உடம் பின் பல பாகங்களுக்கும் சென்று திரும்பவும் இடது வெண்டிரிக்கிளை அடைய எவ்வளவு மணி நேரம் ஆகும்?

இதயத்திலிருந்து புறப்படும் ரத்தம் உடலில் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று மீளுகிறது. இவற்றில் சில இருதயத்தின் அரு கில் உள்ளவை. சில சற்றே தூரத்தில் உள்ளவை. ஆகையால் கேள்விக்கு விடை திருத்தமாகக் கொடுக்க முடியாது. சராசரியாகத்தான் ஒரு வாறு சொல்லமுடியும். உடலில் ஓடும் ரத்தம் தமனிகளில் நொடிக்கு 8 அங்குலம் வீதமும், தந்துகிகளில் நிமிஷத்துக்கு ஒன்று அல்லது இரண்டு அங்குலங்கள் வீதமும் ஓடும் என்று கணக்கிட் டிருக்கிறுர்கள். ஆனலும் சராசரி யில் ரத்தம் இருதயத்திலிருந்து புறப்பட்டு, இருதயத்தை அடைய நீ நினைக்கிறபடி மணிக்கணக்காக நேரம் ஆகாது. 22 நொடி முதல் 25 நொடி வரை ஆகும் என்று மதிப்பிட்டிருக்கிறுர்கள்.

என். சிவஞானம், சேலம்.

வேர்க்குரு வராமலிருக்க என்ன செய்யவேண்டும்?

முதலாவதாக வேர்வை வரா மல் பார்த்துக் கொள்ளவேண்டும். குளிர்ச்சியான இடத்தில் கூடுமான வரையில் இருப்பது நல்லது. குளிர்ந்த தண்ணீரில் குளிப்பதும் நல்லது. கூடியவரையில் மேல் தோலில் ஈரம் தங்காதபடி விசிறியோ, துடைத்தோ கவனித்து வர வேண்டும். சந்தனம் முதலிய சில பூச்சுக்கள் சிலருக்கு உபகார மாக இருக்கிறது. வேறு சிலருக்கு என்ன செய்தாலும் வேர்க்குரு வருகிறது.

பி. ராம்நாத், மதுரை.

எனக்குப் பள்ளிக்கூடம் போகப் பிடிக்கவில்லை. பிடிக்க வைக்க என்ன செய்வது?

இதற்குக் காரணம் நீதான், உன் மனத்தைக் கேட்க வேண்டும். சோம்பேறித்தனமாக இருக்கலாம்; கெட்ட வழக்கம் காரணமாக இருக் கலாம்; உன் திறமையில் நம்பிக்கைக் குறைவாக இருக்கலாம்; உன்னேடு கூடப் படிப்பவர்களில் யார் மீதா வது அதிக வெறுப்பு இருக்கலாம்; அல்லது உபாத்தியாயர்மீது அம் மாதிரி வெறுப்பு ஏற்பட்டிருக்க லாம்; எதுவாயிருந்தாலும் படிப்பு நல்லது என்று எல்லாரும் ஒப்புக் கொள்வதால் நீ உன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு மற்றவ ரைப் போல் நடப்பதுதான் நீதி; எளிதும்கூட.

சி. கந்தசாமி, சிதம்பரம்.

வானத்தில் இடி இடிக்கும் போது ரேடியோவில் 'கொர், கொர்' என்று சப்தம் கேட்கின்ற காரணம் என்ன?

இடியும் மின்னலும் ஒன்றுகவே வானத்தில் மேகத்திடையே உண்டாகின்றன. மின்னல் 'பளிச்' என்று வீசும்போது ஒழுங்கற்ற மின்சார அலைகள் பல இயற்றப்படு கின்றன. இந்த மின்சார அலைகள் நம்முடைய ரேடியோ பெட்டியின் ஏற்கும் கருவியில் படும்போது 'கர் கர்' என்ற சப்தம் கேட்கிறது.

துப்புத் துலங்கியது

'நடனு'

இன்ஸ்பெக்டர் இருதயசாமி ஸ்டேஷனுக்குள் நுழைந்தார். போலீஸ்காரர்கள் 'டக்' கென்று எழுந்து 'சல்யூட்' அடித்தனர். அலட்சியமாகத் தலையை அசைத்துக்கொண்டே அவர் நாற்காலியில் அமர்ந்தார். தமக்குத் தாமே ஒரு தரம் சிரித்துக்கொண்டார்.

இதுவரையில் அவர் இருந்த ஊர் இலவம்பட்டி. அது பட்டிக்காடுமல்ல; பட்டணமுமல்ல. இரண்டு மூன்று திருட்டு வழக்குகளும், சில 'நியூசன்ஸ்' வழக்குகளும் தவிர வேறு வேலையே கிடையாது. சதா ஏதாவது துப்பறியும் நாவல்களை விடாது படித்துக்கொண்டே யிருப்பார். இதன்மூலம் தமக்கு எல்லாம் தெரியும் என்னும் மனப்பான்மை உண்டாகிவிட்டது அவருக்கு.

பெரிய துப்பறியும் நிபுணனை தம்மை 'இரண்டும் கெட்டான்' ஊரில் போட்டு, திறமையை வெளிப்படுத்த முடியாமல் செய்கிறார்களே என்று சர்க்கார் பேரில் ஆத்திரம் ஆத்திரமாக வரும். அடிக்கடி பட்டணத்திற்கு மாற்ற வேண்டுமென்று கோரி மனுப் போட்டுக்கொண்டே யிருந்தார். ஒவ்வொரு மனுவிலும், தம் துப்பறியும் திறமையைக் குறிப்பிட்டு, துப்பறியும் இலாகாவுக்குத் தாம் மிகவும் உபயோகமான ஆசாமி என்பதையும் குறிப்பிடுவார்.

வெகுநாட்கள் வரையில் எவ்வித மாறுதலுமின்றி ஓடிக்கொண்டே யிருந்தது. திடீரென்று ஒரு வாரத்திற்கு முன்னுல்தான், அவருக்கு மாற்றல் உத்தரவு கிடைத்தது! சென்னைப் பட்டணத்திற்கே மாற்றியிருந்ததைப் பார்த்ததும். அவருக்கு அளவில்லாத மகிழ்ச்சி, அதோடின்றி துப்பறியும் இலாகாவில் அவரைப் போட்டிருந்தார்கள்.

இதையெல்லாம் பார்த்ததும் அவருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. வேட்டை நாய்போல் விழுந்து கொண்டிருந்த அவர், அந்த ஊரை விட்டுக் கிளம்புவதற்குள், அந்த ஊரார்களே ஆச்சரியப் படும்படி நடந்து கொண்டார். அவருக்கு டீ பார்ட்டிகூடக் கொடுத்தார்கள் என்ருல்........!

சென்னை வந்தபிறகு அவர் மனம் நிம்மதி யடைந்தது. தமக்கு இனிமேல்தான் அதிர்ஷ்டகாலம் என்று எண்ணினுர். பெரிய 'கேஸ்'களாக இரண்டு மாட்டிக்கொண்டால் போதும்; கொஞ்சம் கொஞ்சமாக பதவிப் படிகளில் காலை வைத்து ஏறத் தொடங்கலாம் என்னும் நம்பிக்கை தோன்றியது.

இதற்கு ஏற்ருற்போல் அவர் வந்த ஒரு வாரத்திற்கெல்லாம் ஒரு பெரிய 'கொலைக்கேஸ்' வந்தது. அவருடைய அதிர்ஷ்டத்தில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை தோன்றிவிட்டது.

நான்கு நாட்களாக அதே காரியமாக அலைந்துகொண் டிருந்தார். தாம் படித்த அத்தனை நாவல்களையும் நினைவுபடுத்திக் கொண்டார். தம் மூளையையெல்லாம் செலவிட்டு, சிரமப்பட்டு விசாரணைகளை நடத்திக்கொண் டிருந்தார்.

வழக்கம்போல் அவரும் நாலைந்து பேர்களை 'அரஸ்ட்' செய்திருந்தார். பலபேர்மீது சந்தேகப்பட்

டார். பல பேர்களைக் கண்காணிக்க ஆட்களை நியமித்தார். சதா அங்குமிங்கும் அலைந்து, அதட்டி, உருட்டி அட்டகாசம் செய்துகொண்டிருந்தார். ஆனாலும் உண்மையான குற்றவாளி அகப்படவில்லை.

* * *

'மன்னார் செட்டியாரின் கொலை' பத்திரிகைகளில் பிரமாதப்பட்டுக்கொண்டிருந்தது. இன்ஸ்பெக்டர் இருதயசாமியின் பெயரும் அடிக்கடி அடிபட்டது.

மன்னார் செட்டியாரின் பக்கத்து வீட்டுக்காரரர் மருதைச் செட்டியார். கடைத் தெருவில் இருவர் கடைகளும் அடுத்தடுத்து இருந்தன. இருவரும் தூர பந்துக்கள்தான். ஆனாலும் பூர்விகக் குடும்பச் சச்சரவு காரணமாகப் போக்குவரத்துக் கிடையாது. அதோடு வியாபாரத்திலும் போட்டி. இவரால் வியாபாரம் கெட்டுவிட்டது என்று அவரும், அவரால் வியாபாரம் கெட்டுவிட்டது என்று இவரும் ஒருவரை ஒருவர் குறை கூறிக்கொண்டிருந்தார்கள்.

இவ்விதத் தகவல் கிடைத்ததும் ஜாக்கிரதையானார் இன்ஸ்பெக்டர். மருதைச் செட்டியார் கொலை செய்யாத போனாலும், ஒருவேளை சம்பந்தப்பட்டிருந்தாலும் இருக்கலாம். அப்படியே இல்லாவிட்டாலும் ஏதாவது முக்கியமான தகவல்கள் சாட்சியத்திற்காவது உபயோகப்படும் என்ற உத்தேசத்துடன், தமது மோட்டார் சைக்கிளில் கிளம்பினார்.

இன்ஸ்பெக்டரின் மோட்டார் சைக்கிள் 'டபடப' என்று சத்தமிட்டுக்கொண்டே மருதைச் செட்டியாரின் கடைவாசலில் நின்றது. ஒரு நிமிஷம்வண்டியிலேயே அமர்த்

தலாக உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டர், மெதுவாகக் கீழே இறங்கினார்.

தம் கடைக்கு எதிரில் இறங்கிய இன்ஸ்பெக்டரை மருதைச் செட்டியாரும் பார்த்தார். தெரு ஓரங்களில் உட்கார்ந்து வியாபாரம் செய்யும் கூடைக்காரர்களை விரட்டத்தான் வந்திருக்கிறார் இன்ஸ்பெக்டர் என்று நினைத்தார் செட்டியார். ஆனால் தம்மை நோக்கி வருவதைப் பார்த்ததும் அவருக்குத் 'திக்' என்றது. சுபாவத்திலேயே கொஞ்சம் பயந்தவர் செட்டியார்.

இன்ஸ்பெக்டரைக் கண்டதும் செட்டியார், "வாங்க, வாங்க! எங்கே இவ்வளவு தூரம்?" என்று கேட்டுக்கொண்டே ஒரு கும்பிடு

போட்டார். அவர் கை லேசாக நடுங்கிக்கொண்டேயிருந்தது. ஊடுருவிப் பார்த்த இன்ஸ்பெக்டர் கண்களுக்கு இது தப்பவில்லை.

''டேய் பையா, ஓடிப்போய் ஒரு கிரஷ் வாங்கிட்டு வா!''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம், செட்டியார்..'' என்று இன்ஸ்பெக்டர் சொன்னதைச் செட்டியார் கவனிக்கவேயில்லை.

''பரவாயில்லைங்க..ஸ ஸ..'' என்று சொல்லிக்கொண்டே, கல்லாவிலிருந்து சில்லறையை எடுத்துப் பையனிடம் நீட்டினார். அவரையே கவனித்துக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டரின் கழுகுக் கண்கள் சில்லறை கொடுக்கும் பொழுது செட்டியாரின் கை நடுங்கியதைக் கவனிக்கத் தவறவில்லை.

''செட்டியார்! ஒரு முக்கியமான விஷயமாக உங்களைப் பார்க்க வந்தேன். சமீபத்தில் நடந்த கொலை உங்களுக்குத் தெரியுமே....''

''கொலையா?..ஆ..மா..ம்..''

''அது விஷயமாக உங்களிடம் சில விவரங்கள் கேட்கவேண்டும்.. இங்கே வேண்டாம்..கொஞ்ச நேரங்கழித்து ஸ்டேஷனுக்கு வந்து சேரும்....''

''ம்..ம்..ச ரி ங் க..நமஸ்காரம்..''வார்த்தைகள் குளறின. கைகள் நடுங்கின. இன்ஸ்பெக்டர் கவனித்துக்கொண்டே மோட்டார் சைக்கிளில் ஏறினர்.

போலீஸ் ஸ்டேஷனில் ஆழ்ந்த யோசனையிலிருந்தார் இன்ஸ்பெக்டர். 'செட்டியார் நம்மைப் பார்த்தாலே பயப்படுகிருர். கைகள் நடுங்குகின்றன. குற்றமற்றவராயிருந்தால் நடுங்குவானேன்? செட்டியாரிடம் குற்றம் இருக்கிறது. ஒன்று அவரே கொலை செய்திருக்கவேண்டும். அல்லது அதற்குக் காரணமாகவாவது இருந்திருக்க வேண்டும்' என்ற தீர்மானத்திற்கு வந்தார் இன்ஸ்பெக்டர். இவ்வளவு சுலபமாகக் கேஸ் முடிந்து விடுமென நினைக்கவேயில்லை அவர். 'செட்டியாரைப் பிழிந்தால் உண்மை வெளிவந்து விடும். பிறகு புகழ்....பதவி..' என்று போய்க்கொண்டேயிருந்தது அவர் எண்ணம்.

''சார், செட்டியார் வந்திருக்கிருர்'' என்ற கான்ஸ்டேபிளின் குரல் அவருடைய சிந்தனையைக் கலைத்தது. உள்ளே நுழைந்துகொண்டிருந்த செட்டியாரையே பார்த்துக்கொண்டிருந்தார் இன்ஸ்

பெக்டர். இரண்டு கைகளையும் ஒன்ருகப் பிடித்துக்கொண்டே நுழைந்தார் செட்டியார். முகத்தில் அசட்டுக் களை. கலவரப் பார்வை. அவரையும் மீறிக் கொண்டு அவர் கைகள் உதறிக் கொண்டிருந்தன. ''நமஸ்காரம்'' என்று நடுக்கத்துடன் சொன்ன செட்டியாரை உட்காரும்படி ஜாடை காட்டினுர் இன்ஸ்பெக்டர்.

செட்டியாருக்கு வயிற்றைக் கலக்கியது. சுற்றிலும் போலீஸ்காரர்கள், துப்பாக்கிகள், கத்திகள், எல்லாவற்றையும்விட இன்ஸ்பெக்டரின் முகமும் அவருடைய பயத்தை அதிகமாக்கின.

''மன்னுர் செட்டியாரை உமக்குத் தெரியுமா?''

''....உம்....''

''என்னையா, விழிக்கிறீர்!.... அவர் உமக்குச் சொந்தம்கூட இல்லையா?......''

''இல்லே..ஆமாம்..ஆமாம்.''

''என்ன சொந்தம்....?''

''எங்க முப்பாட்டனுரின் இளைய பேரனின் மகன்....''

''தாயாதின்னு சொல்லும்..''

''ஆமாம்....ஆனுல்..''

''ஆனுல் எல்லாம் கிடக்கட்டும். கேட்டதற்குப் பதில் சொல்லும்.. அவருக்குப் பிள்ளை குட்டிகள் உண்டா?''

''இல்லேங்க....ஆனுல்..''

''அட, சரிதான் ஐயா.. அவர் செத்தால் சொத்தெல்லாம் உமக்குத்தானே?'' இன்ஸ்பெக்டரின் முகத்தில் வெற்றிப் புன்னகை!

''வராதுங்க....''

''ஏன்?....''

''அவருக்கு ஒரு தம்பி இருக்கிருன்..''

''ஒகோ....'' அசடு தட்டிய இன்ஸ்பெக்டர் சமாளித்துக் கொண்டார். ''சரி, அது போகட்டும், உமக்கும் அவருக்கும் விரோதமுண்டா?''

''விரோதம்னு அப்படி....''

''உண்டா இல்லையா?''

''அப்பாரு காலத்திலேயிருந்தே விரோதம்தானுங்க......''

''உம் .. .. ..வியாபாரத்தில் போட்டியுண்டா?''

''அது எப்பவும் இருப்பது சகஜம்தானுங்க....''

''வீட்டிலே ஒருவர்க்கொருவர் சண்டை போடுவதுண்டா?''''

''பக்கத்து வீட்டிலே யிருக்கிறது ஞலே, எப்பவாவது பொம்பளைங்க ஏதாவது....''

''நீரும் அவரும் சண்டை போட்டதே இல்லையா?''

''ஏதோ ஒரு சமயம்......''

அப்படி வாரும் வழிக்கு.. 'உன்னை ஒழிச்சுட்டுத்தான் மறு வேலை' என்று நீர் சொன்னதுண்டா?''

''அது வந்து அவனைச்......''

உபாத்தியாயர்: டேய் கிட்டு, கிரகணங்கள் எத்தனை வகைப்படும்? அவை என்னென்ன?

கிட்டு: மூன்று வகைப்படும், ஸார்! ஒன்று: சூரிய கிரகணம், இரண்டு: சந்திர கிரகணம், மூன்று: பாணிக்கிரகணம். —**ராகவன்.**

''வேறு சமாதானம் வேண்டாம். அந்த வார்த்தையைச் சொன்னீர்களா, இல்லையா?......

''உம்...ஆமாம்..ஆனால்..''

''உமக்கும் அவருக்கும் விரோதம், வியாபாரத்தில் சண்டை, நேருக்கு நேர் கலாட்டா, ஒழித்து விடுவதாக வேறு சொல்லியிருக்கிறீர். அவரை நீர்தான் கொலை செய்தீர் என்று சொல்லுகிறேன்......''

'கிரீச்'சென்று கத்திக் கொண்டே எழுந்தார் செட்டியார். அவருடைய கைகள் இரண்டும் வெட வெடவென்று ஆடின. மேஜையைப் பிடித்துக்கொண்டு பார்த்தார்; கைகளை அமுக்கிக் கொண்டு பார்த்தார்; நிற்கவில்லை. ஆவேசம் வந்தவர்போல் கத்தினார்.

''இல்லை.... இல்லை.. இல்லவே இல்லை, அந்த விஷயமே எனக்குத் தெரியாது.. ஒழித்து விட்டு மறு வேலை பார்க்கிறேன் என்று சொன்னது அவனை யல்ல, என் வீட்டுக்காரியைத்தான், சண்டை பொறுக்க முடியாமல் சொன்னேன்......''

இன்ஸ்பெக்டர் இதற்கு மசியவில்லை. அவரும் எழுந்தார். அவர்முகம் பயங்கரமாக இருந்தது. ''ஓய், செட்டியார்! உம்மை இன்று பூராவும் கவனித்து வருகிறேன். காலையிலிருந்து பல தடவை கவனித்துவிட்டேன். உமது செய்கையே நீர் குற்றவாளி என்று காட்டுகிறதே. உம்முடைய கைகள் ஏனையா இப்படி நடுங்குகின்றன? குற்றமற்றவர் என்றால் நடுங்க வேண்டிய அவசியம் என்ன? நீர்தான் செய்திருக்க வேண்டும்..''

பேசிக்கொண்டேயிருந்த இன்ஸ்பெக்டர் 'தடா'லென்று மயக்கமாக விழுந்த செட்டியாரைப் பார்த்ததும் நிறுத்திக்கொண்டார்.

தட தடவென்று வெளியிலிருந்து ஓடி வந்தான் ஒருவன்.

''ஐயையோ! செட்டியாருக்கு அந்த..மயக்கமில்ல வந்திடிச்சு.. ஸார், ஸார்! சீக்கிரமா..டாக்டர்.. டாக்டர் சுந்தரமூர்த்திக்குப் போன் பண்ணுங்கள் ஸார். சீக்கிரம்'' என்று கத்தினான் அவன். இன்ஸ்பெக்டருக்கு அவன் செட்டியார் கடை ஆள் என்பது தெரிந்தது. உடனே போன் செய்தார்.

அதற்குள் மெதுவாகச் செட்டியாரைப் பெஞ்சியில் தூக்கிப் படுக்க வைத்து ஜலத்தைத் தெளித்துச் சிகிச்சைகள் செய்தனர். 'டக்டக்' என்று டாக்டர் வருவதைக் கண்டதும் மற்றவர்கள் சிறிது நகர்ந்தனர்.

பரீட்சித்துவிட்டு, உடனே ஒரு இன்ஜெக்ஷன் செய்தார் டாக்டர்.

''செட்டியார் இங்கே எப்படி வந்தார்..? என்ன விசேஷம்?...... ஏதாவது அதிர்ச்சியடையும் சம்பவம் நடந்ததா?'' என்று கேள்விகளை அடுக்கினுர் டாக்டர்.

''கொலை விஷயமாக அவரை விசாரித்துக் கொண்டிருந்தேன்..''

''வெறும் சாதாரணப் பேச்சுக்கு அந்த நரம்புத் தளர்வு ஏற்படாதே.. ..அந்த மயக்கமும் வராதே....ஏதாவது பெரிய அதிர்ச்சி ஏற்பட்டாலொழிய..''

''அவர் கைகள் உதறலெடுத்ததைப் பார்த்து, சந்தர்ப்பங்களையும் கவனித்ததில், அவர்தான் கொலை செய்திருக்க வேண்டும் என்று கூறினேன்.''

''ஹா.... ஹா....'' என்று வயிற்றை பிடித்துக்கொண்டு ஓயாமல் சிரித்தார் டாக்டர். இன்ஸ்பெக்டருக்கு ஆத்திரம் தாங்கவில்லை. ''எதற்காகச் சிரிக்கிறீர்கள்? கொலைக் குற்ற விசாரணை ஹாஸ்யமாக இருக்கிறதா? ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரை அவமானப் படுத்துகிறீரா?''

''பொறுங்கள்.. ..ஐயா.. .. பொறுங்கள்..அவசரப்படாதீர்கள். இதோ இந்தச் செட்டியார் இருக்கிருரே. இவருக்குப் பத்து வருஷமாக நரம்புத் தளர்ச்சி வியாதி. கை ஒரு நிமிஷங்கூட நிற்காமல் சதா ஆடிக்கொண்டேதானிருக்கும். இவர் எதையுமே ஒரு விநாடி கூடப் பிடித்துக்கொள்ள முடியாது. ஏதாவது கொஞ்சம் அதிர்ச்சி ஏற்பட்டால், தாங்காமல் மயங்கி விழுந்து விடுவார். இந்த விஷயம் இந்த வட்டாரத்தில் குழந்தைக்குக் கூட தெரியும். நீர் என்னடா என்ருல், இந்தப் பிள்ளைப் பூச்சியைப் போய் பயமுறுத்திஞல், மயக்கம் போடாமல் என்ன செய்யும்? அப்படியே பயத்திஞல் உயிர் போஞலும் கூட......''

இன்ஸ்பெக்டர் மண்டையில் யாரோ மலையை உருட்டுவது போல் கனத்தது. அவரது புகழ், பதவி, கௌரவம் எல்லாம் சுற்றிச் சுற்றி வந்தன. கூடவே ஏமாற்றம், அவமானம் எல்லாம் நர்த்தனமாடின. நாற்காலியைப் பிடித்துக்கொண்டு சமாளித்துக் கொண்டார்.

"ஏய், ஒன் நாட் ஒன்! ஒரு டாக்ஸி வைத்து, செட்டியாரை வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வா!'' என்று கத்திஞர்.

''எங்க அப்பாவாலே எனக்கு ஒரு காமிரா நஷ்டம்!''

''என்ன நஷ்டம்?''

''எங்கப்பா எங்க அத்திம்பேருக்குத் தலை தீபாவளிக்கு ரிஸ்ட் வாட்சு கொடுக்காமல் நாமம் போட்டார். அதஞலே அவர் எனக்குக் காமிராவுக்கும் நாமம் போட்டுட்டாருடா!''

மூன்று ஆடுகள்

'பைங்கா நாடு'

முருகன் மிகவும் ஏழைதான். ஆனால் உழைப்பும் நாணயமும் உள்ளவன். வயதான தாயாருடன் அவன் குடிசையில் வசித்து வந்தான். அவனிடம் இரண்டு பசுக்கள் இருந்தன. அவைதான் தகப்பன் அவனுக்கு வைத்த செல்வம். அவன் தினம் தன் குடிசையின் எதிரிலுள்ள புல்வெளியில் அப் பசுக்களை மேய்ப்பது வழக்கம்.

ஒரு சமயம் அந்தக் கிராமத்தில் பஞ்சம் ஏற்பட்டது. புல்வெளி எல்லாம் காய்ந்து கிடந்தன. குளம் குட்டைகள் வறண்டு விட்டன. கால்நடைகள் தீனியும் தண்ணீருமில்லாமல் எலும்பும் தோலுமாய் இருந்தன. முருகனும் அவன் தாயும் பசியால் வாடினார்கள். பசுக்களைக் காப்பாற்ற வழியில்லாமல் தவித்தனர்.

ஒரு நாள் அவன் தாயார், "முருகா! கடைசியில் நாம் பசுக்களை விற்கவேண்டியதுதான். நம்மிடம் தீவனம் இல்லை. ஆகையினால் இவைகளைச் சந்தைக்கு ஓட்டிச் சென்று விற்றுவிடு" என்று கூறினாள்.

"அம்மா! தந்தை நமக்கு விட்டுச் சென்ற செல்வம் இந்த இரண்டு பசுக்கள்தான். இவைகளை நாம் எவ்வளவு அன்புடன் வளர்த்தோம்! இவைகளை விற்க மனம் துணியுமா?" என்றான் முருகன்.

"எனக்கும் வருத்தமாய்த்தானிருக்கிறது. நாமே பட்டினி கிடக்கும்போது இவைகளை நாம் எப்படிக் காப்பாற்றுவது? பசுக்கள் நாளுக்கு நாள் மெலிந்து வருகின்றன. இப்படியே போனால் அவைகளின் உயிருக்கு ஆபத்தல்லவா?" என்றாள் தாயார்.

முருகன் பசுக்களை ஓட்டிக் கொண்டு சந்தைக்குச் சென்றான். பசுக்களை நன்றாகக் காப்பாற்றக்கூடியவனிடம்தான் விற்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். வழியில் ஒரு கிழவியைச் சந்தித்தான். அவளும் இவனைப்போல மூன்று ஆடுகளைச் சந்தையில் விற்பதற்காக ஓட்டிக் கொண்டு வந்திருந்தாள்.

இருவரும் இளைப்பாற ஒரு மரத்தடியில் அமர்ந்தார்கள். முருகன் தழைகளை ஒடித்துப் பசுக்களுக்குப் போட்டான். பசுமையைக் காணாத பசுக்கள் ஆவலுடன் தழைகளைத் தின்றன. இதைப் பார்த்துக்கொண்டிருந்த கிழவி முருகனைப் பார்த்து, "அப்பா! இந்தப் பசுக்களை நீ எங்கே ஓட்டிச் செல்கிறாய்?" என்று கேட்டாள்.

"இவற்றை நான் மிகவும் பிரியமாக வளர்த்து வந்தேன். இவைகளை விற்கும்படியாக நேர்ந்து விட்டது. இவைகளை விட்டுப்

பிரிய எனக்கு மனம் வரவில்லை'' என்றான் முருகன்.

''உன் அன்பைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியுண்டாகிறது. நீ என் வார்த்தையைக் கேட்பாயா? உன் இரண்டு பசுக்களை எனக்குக் கொடுத்துவிடு. அவைகளை நான் நன்றாக வளர்ப்பேன். பசுக்களுக்குப் பதிலாக என் மூன்று ஆடுகளையும் நீ எடுத்துக்கொள்'' என்றாள் கிழவி.

முருகனுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. ''கிழவி, உனக்கு எவ்வளவு பேராசை! யாராவது மூன்று ஆடுகளுக்குப் பதிலாக இரண்டு பசுக்களைக் கொடுப்பார்களா?'' என்றான்.

''அவ்விதம் நினைக்காதே. என் ஆடுகள் சாமான்ய ஆடுகள் அல்ல. இவைகளினால் உனக்கு நன்மை ஏற்படும். பிறகு ஒரு சமயம் நீ என்னை நினைத்துக்கொள்வாய்'' என்று கூறி, தன் பையிலிருந்து ஒரு புல்லாங் குழலை எடுத்து ஊதினாள். உடனே அவள் எதிரில் நின்ற மூன்று ஆடுகளும் குதித்துக் குதித்து நாட்டியமாடத் தொடங்கின. இதைப் பார்த்த முருகன் ஆச்சரியத்தால் அசந்து நின்றான். அவனுக்குக் கிழவியின் வார்த்தையில் நம்பிக்கை ஏற்பட்டது. இந்த ஆடுகளைக்கொண்டு விளையாட்டுக் காண்பித்தாவது பிழைக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது.

''சந்தோஷம்தானே? எல்லாவற்றிலும் சிறந்த செல்வம் என்று நினைத்து, இந்த ஆடுகளையும் புல்லாங்குழலையும் பெற்றுக்கொள். கடவுள் உனக்கு நன்மை புரிவார்'' என்று சொல்லி ஆடுகளுடன் முருகனை அனுப்பிவிட்டு, பசுக்களை ஓட்டிச் சென்றாள் கிழவி.

முருகனின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவன் உற்சாகத்துடன் குழலை ஊதினான். ஆடுகளும் அவனுடைய பாட்டிற்கு இசைய ஆடின. அவன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு குதூகலத்துடன் வீடு சேர்ந்தான். வீட்டு வாசலில் முருகனை வரவேற்க அவன் தாய் காத்திருந்தாள். பசுக்களை விற்று, சாப்பாட்டிற்குச் சாமான்கள் வாங்கி வருவான் என்று அவன் தாய் ஆவலுடன் எதிர்பார்த்தாள். ஆனால் முருகன் ஆடுகளுடன் வீடு வந்து சேர்ந்ததும் அவள் ஏமாற்றமடைந்தாள். அவள் வருத்தத்துடன், ''முருகா! யாரோ உன்னை ஏமாற்றி, பசுக்களை எடுத்துக்கொண்டு உன் கழுத்தில் இந்த ஆடுகளைக் கட்டிவிட்டார்கள்'' என்றாள்.

''இல்லை, அம்மா! அப்படியல்ல. நான் பைத்தியமா? நான் நன்றாய் யோசித்துத்தான் இவைகளை வாங்கிக்கொண்டு வந்தேன். ஒரு கிழவி நம் பசுக்களை ஓட்டிக்கொண்டு இந்த ஆடுகளைக் கொடுத்தாள். இவைகளால் எனக்கு அதிர்ஷ்டம் நிச்சயம் ஏற்படப் போகிறது என்று கூறியிருக்கிறாள். எனக்கும் இதில் முழு நம்பிக்கையிருக்கிறது. இந்த ஆடுகளின் நாட்டியத்தைக் காண்பித்தாவது சம்பாதிக்கலாம். அப்படி முடியாவிட்டால் நம் பக்கத்துக் கிராமத்து ஜமீன்தாரிடம் விற்று நல்ல பணம் பெறலாம்'' என்று சொல்லிக் குழலை எடுத்து ஊதத் தொடங்கினான்.

குழலோசையைக் கேட்டு

ஆடுகள் ஆடத் தொடங்கின. ஆடுகளின் ஆட்டத்தைக் கண்ட தாயின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. ஆடுகள் அழகாக ஆடுவதைக் கண்டு வாய்விட்டுச் சிரித்தாள். சிறிது நேரத்திற்குள் ஆடுகளின் ஆட்டத்தைப் பார்க்க, கிராம மக்கள் கூடிவிட்டனர். எல்லோரும் தங்களை மறந்து வேடிக்கை பார்த்தார்கள்.

கொஞ்ச நாட்களில் அக்கம் பக்கத்துக் கிராமங்களிலும் ஆடுகளின் ஆட்டம் பிரபலமடைந்தது. ஜமீன்தாரின் மகளுக்கு ஆடுகள் ஆடும் விஷயம் தெரிந்ததும், அதை உடனே பார்க்கவேண்டும் என்று தந்தையிடம் பிடிவாதம் பிடித்தாள்.

உடனே முருகன் ஆடுகளுடன் வரவழைக்கப்பட்டான். முருகன் இனிமையாகக் குழலை எடுத்து வாசித்தான். ஜமீன்தாரும் அவர் மகளும் ஆடுகளின் ஆட்டத்தைக் கண்டு பிரமித்துப் போனார்கள்.

ஜமீன்தாரின் மகள் முருகனிடம், "உன் ஆடுகளில் ஒன்றை எனக்கு விற்பாயா?" என்று கேட்டாள்.

"பணத்திற்கு நான் ஆட்டை விற்க மாட்டேன். உங்களுக்கு இந்த அதிசய ஆடு வேண்டுமானால் ஒரு வண்டி தானியத்தை என் தாயாரிடம் அனுப்பி வையுங்கள். அப்பொழுது உங்களுக்கு ஆடு கிடைக்கும். ஏனென்றால் என் வாழ்க்கையின் நோக்கம் என் தாயாரை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்பதே. அவள் சாப்பாட்டுக்குத் தானியம் இல்லாமல் கஷ்டப்படுகிறாள்" என்றான் முருகன்.

ஆட்டை வாங்க வேண்டுமென்ற ஆசையினால் உடனே ஒரு வண்டி தானியத்துடன் முருகனின் தாயாரிடம் சென்றாள்.

முருகனின் தாயார் அவளை நன்கு வரவேற்று ஆட்டையும் கொடுத்தாள்.

சில நாட்களுக்குப் பிறகு ஜமீன்தாரிடமிருந்து முருகனுக்கு மறுமுறை அழைப்பு வந்தது. முருகன் தன் இரண்டு ஆடுகளுடன் குழலையும் எடுத்துக் கொண்டு சென்றான். அவனைப் பார்த்ததும் ஜமீன்தாரின் மகள், "நீ எனக்குக் கொடுத்த ஆடு ஆடவில்லை. நான் பெரிய பாடகர்களையெல்லாம் வரவழைத்துக் குழல் வாசிக்கச் செய்தேன். அப்படிச் செய்தும் பயனில்லை. குழல் வாசிப்பவர்கள் அந்த ஆடு தனியாக ஆடாது. மற்ற ஆடுகளுடன் சேர்ந்துதான் ஆடும் என்று சொல்லுகிறார்கள். மற்றோர் ஆட்டையும் எனக்குக் கொடுப்பாயா?" என்று கேட்டாள்.

"மற்றோர் ஆடு தேவையானால் இந்தத் தடவை ஒரு வண்டி தானியத்துடன் நீ அணிந்திருக்கும் தங்க மோதிரத்தையும் கொடுக்க வேண்டும்" என்றான் முருகன்.

உடனே அவள் தன் மோதிரத்தையும் ஒரு வண்டி தானியத்தையும் கொடுத்து மற்றொரு ஆட்டையும் வாங்கிக்கொண்டாள். குழல் ஊதுபவர்களை வரவழைத்து ஊதச் செய்தாள். இரண்டு ஆடுகளும் ஆட மறுத்துவிட்டன. மூன்று ஆடுகளும் சேர்ந்திருந்து அந்த முருகன் குழல் ஊதினால்தான் ஆடுகள் ஆடும்போலிருக்கிறது என்று சொல்லி விட்டார்கள் அவர்கள்.

எப்படியாவது இந்த ஆடுகளை ஆடச் செய்யவேண்டும். அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று அவள் தீர்மானித்தாள்.

உடனே முருகனுக்கு அழைப்புப் பறந்தது. முருகன் தன் ஒற்றை ஆட்டுடன் வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்ததும், "உன் இரண்டு ஆடுகளும் ஆடவேயில்லை. மூன்று ஆடுகளும் சேர்ந்திருந்து, நீயும் குழல் ஊதினால் தான் இவை ஆடும்போல் இருக்கிறது" என்றாள் ஜமீன்தார்மகள்.

"நீ சந்தோஷமாயிருந்தால் போதும்" என்று சொல்லி, தன் ஒற்றை ஆட்டையும் மற்ற ஆடுகளுடன் சேர்த்து, குழலை ஊதினான். மூன்று ஆடுகளும் இப்போது ஆடத் தொடங்கின. ஜமீன்தார் மகள் மகிழ்ந்தாள்.

"மூன்றாவது ஆட்டையும் எனக்குக் கொடுத்துவிடு. நீ என்ன கேட்டாலும் தருகிறேன்" என்றாள் அவள்.

"உன் மோதிரத்தில் பதித்திருக்கும் வர்ணக் கற்களின் ரகசி

யத்தை எனக்குச் சொன்னால் நான் மூன்றாவது ஆட்டையும் தருவேன்'' என்றான் முருகன்.

“முருகா! இந்தக் கற்களில் தான் என் கல்யாண ரகசியம் உள்ளது. இந்த ரகசியத்தை வெளியிடுபவர்களுக்குத்தான் என்னை மணம் செய்து கொடுக்கப் போகிறார் என் தந்தை. என் தலைக் கூந்தலின் மறைவிற்குள் மூன்று சிறு முடிச்சுக்கள் இருக்கின்றன. ஒரு முடிச்சு வெண்மை நிறம். மற்றொன்று சிவப்பு. மூன்றாவது பச்சை. இந்த வர்ணங்களைத்தான் நான் மோதிரத்தில் பதித்திருக்கிறேன்'' என்றாள்.

முருகன் மகிழ்ச்சியுடன் மூன்றாவது ஆட்டையும் குழலையும் கொடுத்துவிட்டு வீட்டுக்குச் சென்றான். சில நாட்களுக்குப் பிறகு, ஜமீன்தார் தம் மகளுக்குக் கல்யாணம் செய்ய ஏற்பாடு செய்தார்.

ஜமீன்தாரின் மகளை மணம் செய்துகொள்ளப் பல இளைஞர்கள் வந்து கூடினார்கள். ஆனால் தலையிலுள்ள முடிச்சுகளைப்பற்றி ஒருவராலும் சொல்ல முடியவில்லை. கடைசியில் முருகன் சுலபமாக முடிச்சுக்களின் வர்ணங்களைக் கூறிவிட்டான்.

இருவருக்கும் ஆடம்பரமாகக் கல்யாணம் நடந்தது. கிழவி சொன்னபடி ஆடுகளினால் அதிர்ஷ்டம் ஏற்பட்டதல்லவா?

ஒவ்வொரு வரியும் நம் ராஜ்யத்திலுள்ள ஓர் ஊரைக் குறிக்கின்றன. அந்த ஊர்களைக் கண்டுபிடித்து, படத்தில் புள்ளிவைத்துக் குறிப்பிட வேண்டும், உங்களால் 15 நிமிஷங்களுக்குள் ஊர்களைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் 26-ஆம் பக்கத்திலுள்ள விடையைப் பாருங்கள்.

சிறந்த நட்பு

க. சண்முகசுந்தரம்

அருமைத் தம்பி!

உனக்கு இந்தக் கடிதத்தில் சிறந்த நட்புக்கு உதாரணமாக இலக்கியத்திலே காணப்படுகிற ஒரு வரலாற்றைக் கூறுகிறேன்.

உன்னைப் போன்ற பிள்ளைகளிடம் நீ சிநேகம் கொள்கிறாய், பேசுகிறாய், விளையாடி மகிழ்கிறாய். ஒருவரை ஒருவர் தழுவித் தோள்மீது தோள் தோய நடக்கிறீர்கள். இவையெல்லாம் நல்லதுதான். ஆனால் சில சமயங்களில் திடீரென்று சண்டை போட்டுக்கொள்கிறீர்கள். அடிதடிக் கலகம்கூட நடந்து விடுகிறது. இது ஏன்? உண்மை நண்பர்கள் இப்படி இருக்கலாமா? ஒருவரை ஒருவர் அறிவாலும் குணங்களாலும் ஒத்திருந்தால் இப்படியெல்லாம் சண்டைகள் வருமா? ஒருவரோடு ஒருவர் அளவளாவிப் பேசிக் கொள்வதிலும் தோளோடு தோள் போட்டு விளையாடி மகிழ்வதிலும்தானா நட்பு இருக்கிறது? இல்லை; இன்னும் இருக்கிறது. அறிவாளிகள் ஒருவரை ஒருவர் பார்க்காமலேயே, சிறந்த நட்பாளர்களாக இருக்கின்றனர். கடிதம் எழுதிக்கொள்வதன் மூலம் சிநேகமாகிவிடுகின்றனர். இந்தச் சிநேகம் வாழ்நாள் முழுவதும் நிலைத்தும் விடுகிறது! உயிர்க்கு உயிர் கொடுக்கும் உயர்ந்த சிநேகமாகவும் ஆகிவிடுகிறது. இதற்கு உதாரணமான ஒரு வரலாற்றைத்தான் இங்கே குறிப்பிட எண்ணுகிறேன். அதைக் காண்போம்.



சோழநாட்டைச் சார்ந்த உறையூரிலே, ஒரு சமயம் கோப்பெருஞ்சோழன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் தமிழில் சிறந்த அறிவாளி. கவி பாடும் வல்லமை உடையவன். தமிழ்ப் புலவர்களைக் கண்டால், ஆர்வத்துடன் வரவேற்றுப் பரிசுகள் தருபவன். அந்தக் காலத்துப் புலவர்கள் அனைவரும், அவனைச் சிறந்த

வள்ளல் என்று பாராட்டினார்கள். இவன் காலத்திலேயே பாண்டிய நாட்டில் ஒரு புலவர் இருந்தார். அவர் பெயர் பிசிராந்தையார் என்பது. பிசிர் என்பது ஊரின் பெயர்; ஆந்தையார் என்பது புலவர் பெயர். பெயர் மிகவும் வேடிக்கையாய் இருக்கிறதல்லவா? அந்தக் காலத்துப் புலவர்கள் பெயரெல்லாம் இவ்வாறு வேடிக்கையாகவே அமைந்திருக்கிறது. சங்க இலக்கியங்களை நீ படித்தால் இவற்றை அறியலாம். பிசிராந்தையார் நல்ல குணங்கள் நிறைந்தவர். படித்தபடி ஒழுகும் பாவலர். அவருக்கு வாய்த்த மனைவி மக்களும் சுற்றத்தாரும் அவரைப் போலவே அறிவு நிறைந்தவர்கள். ஊர் மக்களும் அப்படித்தான். அவருக்குப் போதிய செல்வம் இருந்தது. அதை வைத்துக்கொண்டு கவலையில்லாமல் காலம் கடத்தி வந்தார். வயது அதிகமாக ஆகியும் தலை நரைக்காமல் அவர் தோற்றம் இளமையாகவே இருந்தது. இத்தகைய புலவர், கோப்பெருஞ் சோழனின் குணாதிசயங்களைப் பற்றிப் பல புலவர்களின் மூலமாகக் கேள்விப்பட்டார். சோழனும் புலவர் பிசிராந்தையாரின் புலமையை, வேறு புலவர்கள் மூலமாக அறிந்தான். ஒருவரை ஒருவர் நெஞ்சார நேசித்தார்கள். உணர்ச்சியால் இருவரும் ஒன்றுபட்டார்கள். ஆனால் இருவரும் சந்திப்பதற்குச் சமயம் கிடைக்கவில்லை. கடிதம் மூலமாகவே தங்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்துச் சிநேகத்தை வளர்த்துக்கொண்டார்கள். இப்படிப் பல ஆண்டுகள் கழிந்தன.

சோழன் தன் மக்களுடன் அரசியல் காரணமாகச் சண்டையிட்டுக்கொண்டு அரசைத் துறந்துவிட்டான். மனத்தாங்கலால், உறக்கமும் உணவும் இல்லாமல் வடக்கு நோக்கித் தவம் செய்து உயிர் விடுவதென முடிவு செய்தான். அதற்காக ஊர்ப் புறத்திலே தனக்கு ஒரு மேடையும், அதற்குப் பக்கத்தில் மற்றொரு மேடையும் அமைக்கக் கட்டளையிட்டான். பக்கத்தில் இன்னொரு மேடை எதற்கு என்று மந்திரிகளால் தெரிந்துகொள்ள முடியவில்லை. "என் உயிர் நண்பர் பிசிராந்தையார் இன்னும் சில நாட்களில் இங்கு வருவார்.

அவரும் என்னுடன் வடக்கிருப்பார். அதற்காகத்தான் மற்றொரு மேடை அமைக்கச் சொன்னேன்'' என்று கூறித் தனக்குரிய மேடையில் அமர்ந்து வடக்கிருக்கத் தொடங்கினான். வடக்கிருத்தல் என்றால் ஊண் உறக்கம் நீக்கி வடக்கு நோக்கித் தவம் இருத்தல் என்று பொருள். இந்தச் சொல் பண்டைய இலக்கியங்களில் காணப்படுகிறது.

இதே சமயத்தில் பிசிராந்தையாருக்கு, சோழனைப் பற்றி என்றும் இல்லாத ஓர் எண்ணம் ஏற்பட்டது. அவனுக்கு ஏதோ நேர்ந்து விட்டது என்று புலவருக்குத் தோன்றியது. உடனே புறப்பட்டு, சில நாளில் சோழன் அமர்ந்துள்ள மேடைக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்தவர்கள் வியப்படைந்தனர். சோழனுக்கும் புலவருக்கும் ஏற்பட்ட உணர்ச்சி ஒத்த நட்பைப் பாராட்டினர். வந்த புலவர், அரசனின் உருவத்தை உற்று நோக்கிக் கண்ணீர் வடித்தார். பக்கத்தில் தமக்கென்று அமைத்த மேடையில் அமர்ந்து, தாமும் அவருடன் வடக்கிருந்து உயிர்நீத்தார். இந்த வரலாறு பழைய இலக்கியத்தில் உள்ளது. நட்புக்கு ஒருவரை ஒருவர் சந்தித்திருக்க வேண்டும் என்பதில்லை என்பது இதனால் தெரிகிறதல்லவா? தெய்வப் புலவராம் திருவள்ளுவர் கூறுகிறார்:

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்."

பதவுரை:- புணர்ச்சி - ஒருவருடன் ஒருவர் கூடியிருப்பதும்; வேண்டா - தேவை இல்லை; உணர்ச்சிதான்-இருவருக்கு ஒத்த அறிவுதான்; நட்பாம் - சிநேகமாகிய; கிழமைதரும் - உரிமை தரும்.

நட்புக்கு ஒருவர் ஒருவருடன் சேர்ந்தே இருக்க வேண்டும் என்பதில்லை. இருவருடைய ஒத்த கருத்தே நட்பை உண்டாக்கும்.

இது போன்ற சிறந்த நீதிக் கருத்துக்களடங்கிய குறட்பாக்களைப் படித்து உன் அறிவைப் பெருக்கிக்கொள்.

23-ஆம் பக்கத்திலுள்ள படத்துக்கு விடை:

1. தாம்பரம்
2. திருவண்ணாமலை
3. உதகமண்டலம்
4. திருப்பரங்குன்றம்
5. கோழிக்கோடு
6. காஞ்சிபுரம்
7. தனுஷ்கோடி
8. கன்னியாகுமரி
9. காரைக்கால்
10. கும்பகோணம்
11. திருக்கழுக்குன்றம்
12. காவிரிப்பூம்பட்டினம்

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(J) 245. ஜயராமன் K. S., சென்னை-5. 246. ஜகந்நாதன் D. S., கோயமுத்தூர். 247. ஜகதீசன் M., தஞ்சாவூர். 248. ஜயராமன் K.N., கருப்பத்தூர். 249 ஜயராம் G., கொழும்பு. 250. ஜம்புநாதன் T. N., திருப்பூர். 251. ஜயந்தி R., சென்னை-4. 252. ஜயலட்சுமிR., சென்னை-4. 253. ஜானகிராமன் S. N., மதுரை. 254. ஜகந்நாதன், மாதவன் V. G., புனா. 255. ஜயராமன் S., சிறுகமணி. 256. ஜனார்த்தனன் C., முரளி, முகுந்தன். சென்னை-4. 257 ஜயராமன் T. S., சென்னை-18. 258. ஜான் P., டால்மியாபுரம். 259. ஜோதி V., பீளமேடு. 260. ஜயராமன் G., காசக்குடி. 261. ஜகன் N., ராமநாதபுரம். 262. ஜயராமன் V., சென்னை-18. 263. ஜானகிராமன் K., திண்டிவனம். 264. ஜலஜா R., நாமக்கல். 265. ஜயசந்திரன் A. S., கோதண்டன் A. S., சென்னை-4. 266. ஜயபாலன், சென்னியம்பாளையம்.267. ஜேம்ஸ் மிரண்டா L., அனந்தபுரம். 268. ஜக்கண்ணன் R., போடிநாயக்கனூர். 269. ஜயராம் V. G., சென்னை-4. 270. ஜாபர் S. M. A., கொழும்பு-12. 271. ஜயரத்தினராஜா., யாழ்ப்பாணம் 272. ஜயராமன் G., வேதாரண்யம். 273. ஜனார்த்தனன் C. P., கோயம்புத்தூர். 274. ஜம்புநாதன் T. N., சரஸ்வதி., சென்னை-5. 275. ஜயராமன் D., விருத்தாசலம். 276. ஜகதீசன் A. A., மலாயா. 277. ஜயராம் T. P., பத்மநாபன் T. P., சீனிவாசன் T. P., திருச்செங்கோடு. 278. ஜயஸ்ரீ R., பாலப்பிட்டி. 279. ஜயா K., திருப்பனந்தாள். 280. ஜானி A., திண்டுக்கல். 281. ஜகந்நாதன் K. N., சேலம். 282. ஜயராமன் K. S., டில்லி. 283. ஜயா, பாண்டுரங்கம் C., சுவாமிநாதன், பார்த்தசாரதி, பாபு, ராமலிங்கம்., சென்னை-4. 284. ஜகந்நாதன் R. தாம்பரம். 285. ஜவஹர்லால், தூத்துக்குடி. 286. ஜயராஜ் K., முசிரி. 287. ஜயம் P. M., கல்கத்தா. 288. ஜகதீசன் R., பாண்டிச்சேரி. 289. ஜோஸப், கோலக்கங்சார். 290. ஜானகிராமன் N., கிருஷ்ணகிரி. 291. ஜயராமன் P. C., திருப்பூர். 292. ஜயராமன் S.,

இங்கே கத்தரிக்கவும்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..............................

(தேதி, மாதம், வருஷம்)

நவம், 1-'54 கூபன் செ:

உரிகம். 293. ஜயம் K., வரகூர். 294. ஜயராஜ் J., கைலாசபுரம். 295. ஜவஹர்லால்., மதுரை. 296. ஜயராமன் A. S., அன்பில் 297. ஜோதிலால் P. R., மதுரை. 298. ஜமால் K.S.M., மதுரை. 299. ஜயராமன் V., சும்ப கோணம். 300. ஜீவமணி M., புத்தனும்பட்டி. 301. ஜய ராமன் N., வழுதியூர். 302. ஜானகி R., கொல்லம். 303. ஜய ராமன் A., அறந்தாங்கி. 304. ஜயராமன் V., சென்னை-4. 305. ஜயமாலா L., திருமங்கலம். 306. ஜயராமன் S., திருத் தருப்பூண்டி. 307. ஜானகி S., ஜாம்ஷட்பூர். 308. ஜோதிசானி, புதுச்சேரி. 309. ஜயகர் V. P. A., விருதுநகர். 310. ஜகந் நர்தன் K., சிவகங்கை. 311.

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன் களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★

ஜயா M. C., சென்னை-5. 312. ஜகதீஷ் V., பங்களூர்-5. 313. ஜகந்நாதன் R., நாமக்கல். 314. ஜயராம் K. S., பம்பாய். 315. ஜயவேல், ஞானம், சென்னை-7. 316. ஜயராமன் K., வேந்தன் பட்டி. 317. ஜயகோபாலன் K., மதுரை. 318. ஜானகி K., புது டில்லி. 319. ஜயராமன் B. S., பேளூர். 320. ஜயராமன் K. R., சென்னை-5. 321. ஜான் பிரபா டேவிட், முதுகுளத்தூர். 322. ஜயராமன் T. R., ஜீயபுரம். 323. ஜான் சுந்தர்ராஜ், கன்னியாகுமரி. 324. ஜகந்நாதன் A., சென்னை-4. 325. ஜல்மாநசியா A. A., கூத்தாநல்லூர். 326. ஜகந் நாதன் S., பழனி. 327. ஜக தீசன், மங்களூர்-3. 328. ஜய ராஜ் D., ராஜகுமார், நாகப்பட்டி னம். 329. ஜனனி S., புதுடில்லி. 330. ஜயராம்ராஜு, திருவாரூர். 331. ஜயமணி K., பறவை. 332. ஜகதீசன் S., சட்டநாத புரம். 333. ஜானகிராமன் K. N., மதுரை. ஜயலட்சுமி G., பம் பாய்-16. 335. ஜயராமன் R., பம்பாய். 336. ஜானகிராமன் K., கீழூர். 337. ஜகதீசன் T., வட்டு கொட்டை. 338. ஜானகி, சின்ன காஞ்சீபுரம். 339. ஜகதீசன் A., பாபாநாயக்கன்பாளையம். 340. ஜய லட்சுமி M., சென்னை-4. 341. ஜண்பகவல்லி P. T., புதுச்சேரி. 342. ஜானகி V., பம்பாய். 343. ஜயராமன் N. M., சீகாழி. 344. ஜகதீசன் N., கொடுமுடி. 345, ஜனார்த்தனன் P., ஊர் கம். 346. ஜயராமன் S., சைதாப் பேட்டை.

(மீதி அடுத்த இதழில்)

ஆயிரம் வீரர்கள்

ஈ. ஸ்ரீ

சந்திரனுடைய அண்ணனுக்குப் பம்பாயில் வேலை. பள்ளிக்கூடம் திறந்த ஒரு வாரம் கழித்துத் தான் கோடை விடுமுறைக்குப் பம்பாய் சென்றிருந்த சந்திரன் வந்தான். வரும் பொழுது விளையாட்டுச் சாமான்களையும் மற்றும் பம்பாயில் கிடைக்கும் வஸ்துக்களையும் வாங்கி வந்தான்.

மாதவன் அவனுக்குப் பள்ளித் தோழன். அவன் தந்தை ஒரு குமாஸ்தா. அவருக்கு மாதம் இருபத்தைந்து ரூபாய்தான் சம்பளம். நான்கு குழந்தைகள். இதைக் கொண்டு அவர் அந்தக் குடும்பத்தைச் சமாளிக்கமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். மாதவன் பள்ளிக்கூடத்தில் ஒரு மாதம்கூடச் சரியான தேதியில் சம்பளம் கட்டினதே இல்லை. ஒவ்வொரு மாதமும் அபராதத்துடன்தான் கட்டுவான். இவ்வளவு கஷ்டத்திலும் பகவான் அவனுக்குப் புத்தியை மாத்திரம் அதிகமாகக் கொடுத்திருந்தார். அவன் வகுப்பில் முதல்வனாகத்தான் இருந்தான். இதனால் பல பிள்ளைகளுக்கு அவன்மேல் பொறாமையும் இருந்தது.

சந்திரன் ஊருக்கு வந்த அன்று பகல் பன்னிரண்டு மணிக்கு மாதவன் அவன் வீட்டிற்கு வந்தான்.

"அடே! உனக்காக இந்த ரப்பர் எலியை வாங்கி வந்தேன். வைத்துக் கொள். 'கீச்சுக் கீச்சு' என்று கத்தும்; ஆனால் ஓடாது. என்னிடம் இன்னோர் எலி இருக்கிறது. அதற்குச் சக்கரம் இருக்கிறது. சாவி கொடுத்தால் ஓடும். என் அண்ணன் குடியிருக்கும் இடம் உங்கள் வீட்டைப்போல் இராது. மாடி மேலேயே சாப்பாடு, படுக்கை எல்லாம். கீழேயிருந்து மேலே போக 'லிப்ட்' வைத்திருக்கிறார்கள். உங்கள் அப்பாவைப் போல் வேலைக்காரன் ஒருவன் என் அண்ணனிடம் இருக்கிறான். நான் எங்கே அழைத்துச் செல்லச் சொன்னாலும் அழைத்துக்கொண்டு போவான்" என்றான் சந்திரன்.

இது மாதவனுக்குச் 'சுறுக்' கென்று இருந்தது. இருந்தாலும் இவன் கொழுப்பை அடக்க வேண்டும் என்று எண்ணினான்.

"சந்திரா! உன் அண்ணனுக்காகத்தான் அந்த ஆள் உன்னை அழைத்துச் சென்றான். உங்க



அப்பா: ஸார்! உங்களாலே எனக்கு ராத்தூக்கமே இல்லே!

வாத்தியார்: ஏன்?

அப்பா: பையனுக்கு ஏராளமா வீட்டுக் கணக்குக் கொடுத்துட்டேளே.

—**விஷ்ணு**

ளுக்கு ஒரு வேலைக்காரன். நான் ஆயிரம் வீரர்களை வேலைக்காரர்களாக வைத்திருக்கிறேன். அவர்கள் மகாவீரர்கள். ஆச்சரியப்படும்படி வேலைகளைச் செய்வார்கள். மேலும் பம்பாயில் எல்லாமே விலை அதிகம். வாடகை அதிகம். என் தகப்பனார் இங்கே சம்பாதிக்கின்ற கொஞ்சப் பணத்தில் சுகமாகக் குடும்பத்தை நடத்துகிறோம். அது பம்பாயில் ஒரு நாளைச் செலவுக்குக் கூட போதாது" என்றான்.

"நீதான் பரம ஏழையாயிற்றே. உனக்கு வீரரான வேலைக்காரர்கள் எவ்வாறு இருப்பார்கள்? ஏன் பொய் சொல்லுகிறாய்?"

"நானா பொய் சொல்லுகிறேன்? ஒருகாலும் இல்லை. என் வீரர்கள் யாராலும் முடியாத காரியத்தையும் சாதிக்க வல்லவர்கள். அவர்களைக் காண்பது அரிது."

சந்திரன் தயங்கினான். மாதவன் மேலும் பேசினான்: "நான் ஒன்று சொல்லுகிறேன், கேள்! இதோ இந்த ரப்பர் எலியை ஓர் இடத்தில் வைக்கவேண்டியது. நாம் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, அது தன் வால் பக்கம் நகர்ந்து செல்ல வேண்டும். யாரால் முடியும்? என் வீரர்கள் அதைச் செய்வார்கள்."

"அப்படிச் செய்தாயானால், நான் பந்தயமாக, என்னிடம் உள்ள இந்த ஐந்து ரூபாயை உனக்குக் கொடுத்துவிடுகிறேன்" என்றான் சந்திரன்.

"சரி; அப்படியானால் நாளை பத்து மணிக்கே வந்துவிடு" என்றான்.

சந்திரனும் ஒப்புக்கொண்டு மறு நாள் காலை வந்தான். இருவரும் வீட்டின் கூடத்தில் உட்கார்ந்தார்கள். மாதவன் தன் கையிலிருந்த ரப்பர் எலியைச் சந்திரனிடம் காண்பித்தான். பிறகு எதிரிலேயே முற்றத்தைத் தாண்டியிருக்கும் அடுத்த தாழ்வாரத்தில் வைத்துவிட்டு, மறுபடியும் சந்திரன் பக்கத்தில் உட்கார்ந்தான்.

மாதவன், "சல், பகவதி! வீரர்களே! இந்த ரப்பர் எலியை வால் பக்கம் போகும்படி செய்யுங்கள். உங்களுக்குக் கூலி கொடுக்கிறேன். மறைந்து வேலை செய்யுங்கள்" என்றான்.

அரை மணி நேரம் சென்றது. என்ன ஆச்சரியம்! ரப்பர் எலி மெல்ல வால் பக்கம் நகர ஆரம்பித்தது. உடனே மாதவன், "சந்திரா! பார்த்தாயா? என்று

கத் தெரிந்துகொள். இது கண்கட்டு வித்தையல்ல. உன் எதிரிலேயே இப்பொழுது இந்த எலி, வால் பக்கம் நகருகிறது. எடு, ஐந்து ரூபாயை'' என்றான்.

சந்திரன் ஐந்து ரூபாயை மாதவனிடம் கொடுத்துவிட்டு வீடு சென்றான்.

சந்திரன் வீட்டிற்கு வந்து, எந்த எந்த விதமாகவோ யோசித்தான். அந்த வீரர்களைப்பற்றி அவனுக்குப் புரியவில்லை. தன் தந்தையிடம் அந்த அதிசயத்தைச் சொன்னான். அவர் ஆச்சரியப்பட்டாரே ஒழிய, அவருக்கும் ஒன்றுமே புலப்படவில்லை.

''சந்திரா! அந்த ரப்பர் எலியின் அடியில் சக்கரம் ஏதாவது வைத்திருந்தானா?'' என்றார்.

''நான்தானே பம்பாயிலிருந்து வாங்கி வந்து அவனுக்குக் கொடுத்தேன்.''

''எதற்கும் அந்த எலியை வாங்கி வா'' என்றார் தந்தை.

சந்திரன் ரப்பர் எலியைக் கொண்டுவந்தான். அதற்கு வால் இல்லை.

''அப்பா! ரப்பர் எலியின் வாலை அந்த வீரர்களுக்குக் கூலியாகக் கொடுத்துவிட்டான் மாதவன். இந்த அற்புதச் செயலுக்கு வால்தான் கூலியாகப் பெற்றார்கள் அந்த வீரர்கள். வேறு ரப்பர் எலி வேண்டுமானால் கடையில் வாங்கிக் கொடுப்பதாகச் சொன்னான்'' என்றான். அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. மாதவனை அழைத்து வரும்படி சொன்னார். அவனும் வந்து சேர்ந்தான்.

''அடே! மாதவா! ரப்பர் எலியை வால் பக்கமாக நகரும்படி செய்தாயாமே. பந்தயத்திலும் ஜயித்தாயாம்; ரப்பர் எலியின் வாலைக் கூலியாகக் கொடுத்தாயாம்; நீ ஏதாவது மந்திரத்தால் தேவதையை வசியம் செய்திருக்கிறாயா?'' என்றார்.

''இல்லை, சுவாமி! உங்களுக்கும் எங்களுக்கும் உலகத்தில் எல்லோருக்கும்தான் புத்தியை ஏற்படுத்தியிருக்கிறார் கடவுள். எனக்குச் சமயம் வந்தபோது நான் அதை உபயோகப்படுத்திக்கொண்டேன்'' என்றான் மாதவன்.

"எனக்கு நன்றாகத் தெரியவில்லை. விவரமாய்ச் சொல்."

"இவனோடு பந்தயம் வைத்தேன். மறுநாள் சந்திரன் என் வீட்டிற்கு வந்தான். அவன் வரும் முன்னரே, அந்த ரப்பர் எலியன் வாலில் நன்றாகத் தேனைத் தடவினேன். எதிர்த் தாழ்வாரத்தில் என் வீட்டில் சிற்றெறும்புகள் புர்று வைத்திருந்தன. அதற்குக் கொஞ்ச தூரத்தில் இந்த ரப்பர் எலியை வைத்துவிட்டேன். அரை மணிக்கெல்லாம் அந்தச் சிற்றெறும்புகள் தேன் வாசனைக்காக, ரப்பர் எலியின் வாலை மொய்த்துக் கொண்டன; மெல்லப் புற்றுக்கு இழுத்துச் சென்றன. அதனால் தான் எலி வால்பக்கம் நகர்ந்தது. எறும்புகள் தான் என் வீரர்கள். புற்றில் ரப்பர் எலியைப் புகுத்த முடியாமையால் தேன் தடவிய வால் பாகத்தை எறும்புகள் அரித்துவிட்டன" என்றான்.

சந்திரனின் தந்தை ஆச்சரியமடைந்தார். மூக்கின்மேல் விரலை வைத்தார். தம் பிள்ளையைப் பார்த்து, "சந்திரா! பார்த்தாயா, அவனுடைய சாமர்த்தியத்தை? எனக்கே ஆச்சரியமாய் இருக்கிறது" என்றார்.

அன்றே சந்திரனின் தந்தை, மாதவனுக்கு ஸ்காலர்ஷிப்புக்குப் சிபாரிசு செய்து, அதை வாங்கியும் கொடுத்தார். சந்திரன் கர்வம் அடங்கியது.

சந்திரகிரிக் கோட்டை

"ஜனு"

முதல் படியில் அமலன் காலை வைத்ததுமே பதுமை மீண்டும் கைகளைக் குறுக்கே நீட்டித் தடுத்தது. அவை என்ன சாதாரணப் பதுமையின் கரங்களாகவா இருந்தன? இரும்புக் கரங்கள்! வாளை எடுத்து வெட்டினால் கரங்களை வெட்ட முடியாது. வாள்தான் இரு துண்டுகளாக ஒடிந்து விழும். அத்தனை உறுதியாக இருந்தது. அந்தக் கைகளுக்குக் கீழாகவோ மேலாகவோ தாண்டிச் செல்லலாமா என்று அமலன் யோசித்தான். அந்த ஒரு வழிதான் இருந்தது. அப்படியே குனிந்து இரண்டாவது படிக்கட்டில் கைவைத்து ஊன்றியதுமே, மேலே இருந்த அந்த இரும்புக் கரங்கள் அவன் முதுகின் மீது அழுந்தத் தொடங்கின. இன்னும் சற்றுப் போனால், அவனைப் படிக்கட்டோடு படிக்கட்டாக வைத்து அழுத்தி, அப்படி இப்படி நகரவிடாமல் செய்திருக்கும். நல்ல சமயத்தில் ஏதோ ஒரு யுக்தி தோன்றவே, இரண்டாவது படிக்கட்டில் ஊன்றியிருந்த கையை எடுத்து விட்டான். இரும்புக் கைகளும் மேலே போய்விட்டன. அப்பாடா, பிழைத்தான்!

கீழே நுழைந்து போகமுடியாது என்று கண்டதும் மேல்புறமாகக் கைகளைத் தாண்டிக் குதிக்க எண்ணினான். பதுமையில்லாத கட்டைப் பிடியைப் பிடித்துக் கொண்டுதான் அவன் ஏறவேண்டியிருந்தது. அந்தக் கட்டைப் பிடியின் முனை, தட்டுப்போல் வட்டமாக இருந்தது. அமலன் அதைப் பிடித்து ஏறிக் காலை வைத்ததுமே அந்தத் தட்டு அவனைப் புரட்டிக் கீழே தள்ளி விட்டது.

அமலனுக்குக் கீழே விழுந்ததில் சரியான அடி. இருந்தாலும் அவன் சமாளித்துக்கொண்டு ரோசமுடன் எழுந்தான். தன்

னைப் போன்ற ஒரு மனிதன் தானே இந்த அற்புதச் சூட்சுமங்களைக் கண்டு பிடித்து நிர்மாணித்திருக்கிறான்? 'அவன் மூளையில் உதித்த இந்தக் கற்பனையை நம்மால் ஊகிக்கவே முடியாமலா போய்விடும்?' என்றவாறு சிந்தனை சென்றது.

யோசித்து யோசித்து அவன் மூளையே குழம்பிவிட்டது.

மாலை இருள் கவிந்து வருவது மாடத்தின் வழியே தெரிந்தது. இன்னும் சரியாக நாலே ஜாமங்கள் தான் இருந்தன. அதாவது முப்பது நாழிகை! கண்ணாடி மாளிகையை விட்டு, எட்டுக் கோண மஹலுக்குள் நுழைவதற்கே அரைநாள் ஆகிவிட்டது. இன்னும் இந்த இடத்தை விட்டு வெளியேறும் வழி புலப்படவில்லை. அதற்குள் அஸ்தமனமே ஆகிவிட்டது. இன்னும் பொழுது விடிவதற்குள் போய்ச் சேரவேண்டிய இடங்கள் எத்தனையோ! திண்டாட்டங்கள் எத்தனை பட வேண்டியிருக்குமோ? இவ்வளவையும் தாண்டிக் கடந்து சென்றால், முறியிருக்கும் பெட்டகம் எவ்விதம் இருக்குமோ? இத்தனை விந்தைகளுக்கும் சிகரம் வைத்தது போலத்தான் இருக்கும் என்பதில் என்ன சந்தேகம்?

அமலன் பார்த்தான். மிரண்டால் காரியம் நடக்காது என்று தோன்றியது. ஏதாவது ஓர் உயரத்திலிருந்து ஏழெட்டுப் படிக்கட்டுகளுக்குமேல் போய்க் குதித்தால் என்ன என்ற எண்ணம் எழுந்தது. தைரியம் காட்டுவதில் தவறு இல்லைதான். ஆனால் குருட்டுத் தைரியம் ஆகுமா? எட்டுப் படிகளுக்குமேல் ஏதாவது ஒரு சூட்சும விசை இருந்தால் இந்தத் தைரியத்தினால் என்ன பலன் ஏற்பட்டுவிடும்? ஆய்ந்து ஓய்ந்து பாராமல் செய்யும் எந்தக் காரியம் தான் உருப்படியாக நிறைவேறும்? 'எண்ணித் துணிக கருமம்' என்று திருவள்ளுவர் விளையாட்டாகவா சொல்லியிருக்கிறார்?

மின்னல் ஒன்று பளிச்சிட்டது; அவன் மூளையில்தான்! இடையிலே இருந்த வாளை உருவினான். எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக இருப்பது இந்தப் பதுமைதானே? இதைச் சின்னபின்னப் படுத்திவிட்டால்—? அப்புறம் சூட்சுமம் எது, விசை எது?

இந்த யோசனை பளிச்சிட்டதற்கு அமலன் தன்னைத் தானே மெச்சிக்கொண்டான். சரியான சமயத்தக்குச் சரியான யோசனை தோன்றியதே என்று தனக்குள் பெருமைப் பட்டுக்கொண்டான். ஒரே வெட்டில் இரண்டு துண்டுகளாக்கிவிடவேண்டும் இந்தச் சிலையை என்று வாளை ஓங்கினான். பதுமையின் மண்டையைப் பார்த்துப் பிளந்தான்.

முன்பு இந்த வாள்தானே உதவியது? ஆனால் இதே வாள் இப்போது அவனை ஏமாற்றிவிட்டது; பதுமையின் மண்டையில் பட்ட வாள் பதுமையை வெட்டுவதற்குப் பதில் அதன் மண்டையில் வஜ்ஜிரம் போட்டு ஒட்டியது போல் ஒட்டிக்கொண்டுவிட்டது. ஆம்; அத்தனை சக்திவாய்ந்த காந்தத்தினால் ஆன தலை. மேலாகப் பார்த்தால் அழகிய பெண்ணுருவில் இருந்த பதுமை அசைக்க முடியாத உறுதி வாய்ந்த இரும்பாக இருந்தது.

அப்படி அந்த வாள் ஒட்டிக்கொண்டதும் அவன் மண்டையிலேயே யாரோ அடிப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. 'ஆகா, எனக்கு எவ்வளவு இறுமாப்பு! என் அகங்காரத்தை ஒழிப்பதற்காக ஆண்டவனே படைத்த பதுமையோ இது!' என்று அமலன் தனக்குள் பலமுறை சொல்லிக்கொண்டான்.

வாளை உருவி எடுக்க ஆனவரையில் முயன்றும் பலன் ஒன்றும் ஏற்படவில்லை. முக்கினான்; முனகினான். உதைத்தான்; இழுத்தான்; இழுத்து இழுத்தப் பார்த்தான். ஊகும்; வாள் அசையவேயில்லை. மலையையே புரட்டினாலும்

புரட்டிவிடலாம் போலிருந்தது; வாளை இழுக்க முடியவில்லை.

இனி என்ன செய்வது? இருள் பரவிவிட்டது. பசியோ முளைத்து விட்டது. காரியம் ஒன்றும் ஆக வில்லை!

அமலன் அந்தப் புத்திக் கலக் கத்திலும் ஆண்டவன் அருளைப் பிரார்த்திப்பது ஒன்றுதான் வழி என்பதை மறக்கவில்லை. அந்த ஒரே நம்பிக்கைதான் இப்போது அவனுக்கு இருந்தது. அதையும் இழந்துவிட்டால் அவன் சோர்ந்து கைவிரித்துக் கீழே செயலற்று விழுந்திருக்க வேண்டியதுதான். எஞ்சி நின்ற மனித யத்தனத்தை ஆண்டவன் ஆணைதான் ஊக்க முடியும் என்பதைக் கண்டு, "இறைவா! ஊர் உலகத்தின் கண் களிலே நான் வீரன், தீரனுயிருக்க லாம். ஆனல் உன் அருள் இன்றி எந்தச் சூரனும் தன் வீரத்தைக் காட்ட முடியாது; புகழ் எய்தமுடி யாது. உன் நினைவின்றி அவன் உய் யவே முடியாது. நான் க்ஷணநேரம் உன்னை மறந்து என் பராக்கிர மத்தை நம்பிவிட்டேன். அதனல் ஏமாந்தேன். உன்னை மெய்வருந்தி வணங்குகிறேன். எனக்கு ஒரு வழி அருள்வாய்!" என்று பிரார்த் தனை செய்தான்.

ஆண்டவன் என்ன 'ரெடிமேட்' கடையா வைத்திருக்கிறார்? அம லன் வேண்டியதும் உடனே அருள் என்ற பொருளை எடுத்துத் தூக்கிக் கொடுக்க! அமலனுடைய அகந்தையெல்லாம் ஒழிந்து, சிந்தை தெளிந்து, மனசு நிர்மலமான பொழுதுதான் அவனுக்கு நிம் மதியே ஏற்பட்டது. தன்னை மீறிய சக்தியை அருளும் இறைவனை வேண்டுவது, மனசு நிர்மலமாவ தற்குத்தானே!

மனசு களங்கமில்லாமல் தெளி வாக இருந்த சமயத்தில்தான் அமலனது புத்தி, கூர்மையாக வேலை செய்தது. பதுமையைப் பரமனுக எண்ணிப் பார்த்துக் கொண்டேயிருந்தவன் சித்தத் தில் மீண்டும் ஓர் ஒளி வீசிவிட்டு ஓடியது.

'பளிச்!'

பதுமையின் கண்களைக் கூர்ந்து பார்த்தான். செவிகளைக் கூர்ந்து பார்த்தான். அதன் கை கால் களைக் கூர்ந்து பார்த்தான். இதற்கு முன்பும்தான் இவ்வள வையும் ஆராய்ந்து பார்த்திருக் கிறுன்! ஆனல் இப்போது அவன் பார்வையே புதுமையாக இருந் தது. புதிய நோக்கு இருந்தது. சாதாரண பார்வைக்குப் படாத வைகள் தென்படுவதுபோல் இருந் தன. ஏதேதோ தெரிந்தன. எப்படி எப்படியெல்லாமோ தெரிந்தன.

அடுத்த கணம்—

இரண்டு கண்களையும் இரண்டு விரல்களால் உள்ளே தள்ளினன். ஏதோ எங்கேயோ, படாரென்று சத்தம் கேட்டது. இரண்டு செவி களையும் இரண்டு முறுக்கு முறுக்கி ஞன். அடுத்த கணம் அவனுடைய வாள் தானுகவே கீழே விழுந்தது. அவன் படியேறுவதைத் தடுத்த இரு கரங்கள் தாமாகவே இறங்கக் கீழே விழுந்தன. அந்த இடத்தில் மேல் தளத்திலிருந்து இறங்கிய பலகை ஒன்று இறங்கி வந்தது. அமலனுடைய ஆனந்தத்துக்கு ஓர் எல்லை உண்டா, என்ன? அவன் மெய்ம்மறந்தான். கூட்பிய கை வாளைக் குனிந்து எடுக்கக்கூட

மறந்துவிட்டது. "என்னைப் படைத்த இறைவா, உன் கருணையே கருணை!" என்று துள்ளிக் குதித்தான். பிறகு வாளை எடுத்துக் கொண்டு அந்தப் பலகையின்மீது ஏறி நின்றான். பதுமையின் காதுகளை மீண்டும் ஒரு முறை முறுக்கி விட்டான். பலகை தன்னைத் தூக்கிக்கொண்டு போகும் என்ற நம்பிக்கை ஒன்று எப்படியோ ஏற்பட்டுவிட்டது.

அதுதான் காலத்துக்கு உள்ள மகிமை. நல்ல காலம் இருந்தால் செய்வது எல்லாம் நன்மையாகத் தான் முடியும்? அந்த நல்ல வேளை வரும்வரையில் 'ஆகா' என்றாலும் முடியாது; 'ஊஹும்' என்றாலும் முடியாது. பகுத்தறிவு எல்லாம் உடலில் திமிரும் முறுக்கும் இருக்கும் வரையில், புத்தி எட்டுகிற உயரம்வரையில் தான் உயரும். சூட்சும அறிவு என்பது மனிதன் சோர்ந்த சமயத்தில் கூட அவனுக்கு வந்து உதவி விடுகிறது. அந்தச் சூட்சும அறிவு விளக்கம்தான் ஆண்டவனை உணர்வது என்பது! அதுதான் வேளையைக் கொண்டு வருவது! அமலனுக்கு அந்த நல்ல வேளை வந்துவிட்டது. பலகை உயரே



உயரே அவனைத் தூக்கிக்கொண்டு எழும்பத் தொடங்கியது. சற்று நேரத்தில் அவன் ஏறி இறங்கிச் சோர்ந்துபோன அந்தப் படிக் கட்டுக்களையும் இருட்குகைகளையும் தாண்டி, தூபதீபங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள ஸ்வர்ண மண்டபத்தில் கொண்டுவந்து இறக்கியது.

அமலன் அந்த அலங்காரமான மண்டபத்தைக் கண்டு வாயையே பிளந்துவிட்டான். நறுமணம் கமழும் சிற்றுண்டிகளும் வாசனை காட்டும் இனிய நற்பழங்களும் அங்கே அவனுக்காகக் காத்திருந்தன. தேவதைகளோ, பூதகணங்களோ ஒன்றும் அந்த ஏற்பாடுகளைச் செய்துவிடவில்லை. அரண்மனைச் சிப்பந்திகளில் அந்தரங்கமான பணியாள் ஒருவன்தான் அங்கே தயாராக இவ்வளவையும் செய்த வைத்துக்கொண்டு காத்திருந்தான்.

அவனைப் பார்த்ததும் அமலனுடைய முதல் கேள்வி இதுதான்: "ஏன் அப்பா! நான் முதலில் வந்திருக்கிறேனா? எனக்கு முன்பு என்னைப் போலவே இங்கே யாராவது வந்துவிட்டுப் போனார்களா?"

அவன் அமலனை வெறுமே பார்த்துக்கொண்டு நின்றான்.

"நீ யாருடனும் பேசக்கூடாது என்று உத்தரவா?"

அவன் அந்த வார்த்தையைக் காதில் வாங்கிக்கொண்டதாகவே தெரியவில்லை.

"சரி; நீ ஒன்றும் பேசவேண்டாம். எனக்கு ஆகாரமாவது கொடு. அது போதும். பசி என்னை இப்போது வாட்டுகிறது" என்றான்.

அப்போதும் அவன் ஒன்றும் பேசவில்லை. எப்படிப் பேசுவான்!

அவன் ஓர் ஊமை! இந்த உண்மையை அமலன் பிறகுதான் உணர்ந்துகொண்டான். ஊமைக்கு எப்போதுமே ஊகம் அதிகம் என்பார்கள்! அவன் அமலனுடைய தேவைகளை உடனே ஊகித்துக் கொண்டுவிட்டான். அமலன் மனத்தினுள் என்ன நினைக்கிறான் என்பதை ஊகித்துவிட்டான் என்பது அவன் செயல்களிலிருந்து தெரிந்தது. கை கால்களைக் கழுவ நல்ல தண்ணீர் எடுத்துக் கொடுத்தான். ஆகார வகைகளை அடுக்காகப் பரிமாறினான். "நான் ஊமையாக இருந்தாலும் என் வேலையை நான் உணர்வேன்; என் கடமைகளை நான் அறிந்து நிறைவேற்றுவேன்" என்பது போல் குறிப்பறிந்து நடந்துகொண்டான்.

ஆகாரத்தை முடித்துக்கொண்ட அமலன் சிறிதுநேரம் சிரமபரிகாரம் செய்துகொண்டான். அதுவரையில் ஊமை பொறுமையாகக் காத்திருந்தான்.

எங்கிருந்தோ ஒரு மணிச் சத்தம் கேட்டது. அங்கிருந்த ஒரு திரை விலகியது தெரிந்தது. உடனே ஊமை அமலனைப் பார்த்து வணங்கி, "உம் எழுந்திருங்கள். நீங்கள் புறப்படவேண்டிய சமயம் வந்துவிட்டது!" என்பது போல ஊமை ஜாடைகாட்டி அவசரப்படுத்தினான்.

அடுத்த கணம் அமலனை அழைத்துக்கொண்டு போய் வேறு ஒரு வாசல் வழியாக வெளியே அனுப்பிவிட்டுக் கதவை இறுக மூடிக்கொண்டான்.

(தொடரும்)

எங்கள் பகுதி

தாண்டவக்கோனே!

கண்ணன் எந்தன் கண்ணன் ஐயா தாண்டவக்கோனே!
அவன் தமிழ் நாட்டின் மன்னன் ஐயா தாண்டவக்கோனே!
"கேட்டீர்களா?" நல்ல அம்சம் தாண்டவக்கோனே!
குழாய் ஹாஸ்யம் பலே ஜோரு தாண்டவக்கோனே!
"லீடர் மணி" எ ஒன் ஐயா தாண்டவக்கோனே!
அவன் வாழ்க்கையிலே வெற்றி காண்பான் தாண்டவக்கோனே!
"அருமையான சம்பவம்" தான் தாண்டவக்கோனே!
அழகான கற்பனையே தாண்டவக்கோனே!
"கேளுங்கள் சொல்லுகிறேன்" தாண்டவக்கோனே!
பயனுள்ள பகுதி ஐயா தாண்டவக்கோனே!
"தூங்கும் அழகி" அருமை அருமை தாண்டவக்கோனே!
அவள் பெயரோ தெரியவில்லை தாண்டவக்கோனே!
"காப்பாற்றிய கடிதம்" ஐயா தாண்டவக்கோனே!
நல்ல கருத்து அளிக்கும் கதை தாண்டவக்கோனே!
"எலக்ட்ரிக் பெல்" எ ஒன் ஐயா தாண்டவக்கோனே!
அதைச் செய்து பார்த்தேன் முடியவில்லை தாண்டவக்கோனே!
"விருந்தண்ட திருடன்" கதை தாண்டவக்கோனே!
ஒரு படுமோசமான கதை தாண்டவக்கோனே!
"சந்திரகிரிக்கோட்டை" சாமி தாண்டவக்கோனே!
அதை வர்ணிக்கவே வார்த்தையில்லை தாண்டவக்கோனே!
"பொன்மொழிகள்" வரவேணும் தாண்டவக்கோனே!-கண்ணனில்
பொன்மொழிகள் வரவேணும் தாண்டவக்கோனே!
"எங்கள் பகுதி" நல்ல பகுதி தாண்டவக்கோனே!
எல்லோருக்கும் வணக்கம் ஐயா தாண்டவக்கோனே!

—கே. என். பாலகிருஷ்ணன், தும்பகோணம்.

ஒரு சபாஷ்!

இது சத்துள்ள பழம்தான்—ஆனல் அதுதான் கிடைப்

பதரிதாயிர்றே? மணி பாவம்! அவன் கதி என்ன ஆகுமோ?

சாவித்திரிக்கு இருந்த பெருந் தன்மைக் குணமும், ராமுவுக்கு

இருந்த நேர்மை உள்ளமும் ஒவ்வொருவரும் ஒருங்கே பெற்றிருந்தால்... அப்புறம், அடே அப்பா! உலகமே மாறிவிடாதா, என்ன! 'பூனை எங்கே' என்ற கதையில் ஒரு பலனையும் காணோம்.

படம் ஆடியபோது என் உள்ளம் - ஏன், நமது உள்ளம் - படும் பாட்டை விவரிக்கவும் முடியுமா? அதோடு நமது உள்ளமும் ஆடுகிறது.

விஞ்ஞான ஆசிரியரின் சேவைக்கு வந்தனம். இதற்குமுன் இதழில் எழுதப்பட்ட மின்சார மணி செய்யும் விதத்தைக் கூறப்பட்டது போலவே, வேறு சிறு வேலைகள் எங்களுக்குத் தர வேண்டும். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்னும் பழமொழி அமலனுக்கு நிச்சயம் உண்டு.

எங்கள் பகுதியில் வஸந்தாவால் எழுதப்பட்ட விமரிசனத்திற்கு ஒரு சபாஷ்! அதற்கே ஒரு விமரிசனம் எழுத வேண்டும்போல் இருக்கிறது. ஆனால் தீபாவளி மலரை எதிர்ப்பார்க்கும் நான் எங்கே எழுதப்போகிறேன்?

—தண்டபாணி, தம்மம்பட்டி.

'அறிவு மலர்'

1-10-54 கண்ணன் இதழ் பலே ஜோர். அட்டைப்படம் நன்றாக உள்ளது. 'கேட்டீர்களா!' பயனுள்ள பகுதி. செய்திகள் ஒழுங்காக அமைந்துள்ளன. 'அருமையான சம்பவம்' கண் கலங்க வைக்கிறது. 'ஆர்வி'யின் 'லீடர் மணி' 'அருமையான கட்டத்தில் இருக்கிறான். அடுத்த இதழில் என்ன நடக்கிறதோ! 'பெருந்தன்மை' பழைய கதை. மெருகு கொடுக்கப்பட்டுள்ளது.

'நேர்மை உள்ளம்' பழைய கதையைத் தழுவி, சிறிது விஸ்தரிக்கப்பட்டுள்ளது. சொந்தமாக எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன். 'பூனை எங்கே' மிகவும் நல்ல ஹாஸ்யக் கதை. இம்மாதிரியான கதைகளை அறிவூட்டும் பாணியில் எழுதும்படி 'தில்லைவாணன்' அவர்களை நான் (தம்பி தங்கைகள் சார்பில்) கேட்டுக் கொள்கிறேன்.

'தாதியின் வெற்றி'யில் ஏதோ குறையிருப்பதாகத் தோன்றுகிறது. 'ரங்கன்' அவர்களை இனி வரும் போட்டிகளில் மேலும் சிறந்த முறையில் குறைகளில்லாமல் எழுதும்படி கேட்டுக் கொள்கிறேன்.

'பேராசிரியர் விஞ்ஞான'த்தின் 'கேளுங்கள் சொல்கிறேன்' முன் போலவே சிறந்ததாகவும், அறிவுச் சுடராகவும் விளங்குகின்றது. 'ஆடிய படம்' வெகு ஜோர். ராமுவைப் போலவே இக்கதை நமக்கு நல்ல அறிவினை ஊட்டுகின்றது. 'தூங்கும் அழகி' 'ஆர்வி'யாலும் 'ஸாமி' அவர்களாலும் சிறப்பிக்கப் படுகிறாள்.

'சந்திரகிரிக்கோட்டை' முன் போலவே சிறப்பாக உள்ளது. 'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' என்பது அமலன் வரையில் உறுதியாக்கப் படுகின்றது. 'எங்கள் பகுதி' எங்களுடைய பகுதியேதான்.

—எம். என். புருஷோத்தமன்,
சேலம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கதிரவன் எங்கே?

(வரிசைப்படுத்தி எழுதினால் கதையாகும்.)

1. முன் காலத்தில் இப்பொழுதுள்ளதைப்போல வீடுகளில் கடிகாரம் கிடையாது.
2. அவனுடைய நாட்டில் கோமுகி ஆறு ஓடியது.
3. அணையைக் கட்டி முடிக்க மாலை ஆறு மணியாகிவிட்டது.
4. நதியின் வெள்ளம் ஊருக்குள் வந்துகொண் டிருப்பதால் மக்கள் தூங்கவே இல்லை.
5. கோமுகி நதியால் கீழ்த்திசை நாட்டு மக்களும் பயனடைவதைக் கண்டு தீர்க்கமுகன் பொறாமை கொண்டான்.
6. இதையறிந்த மந்திரி ஒரு தந்திரம் செய்தான்.
7. அணையை உடைத்து முடிப்பதற்கும் கதிரவன் வெளிவருவதற்கும் சரியாக இருந்தது.
8. தீர்க்கமுகன் என்ற கொடுங்கோல் மன்னன் ஒருவன் இருந்தான்.
9. ஆனால் பொழுது விடியவில்லை.
10. மன்னன் மந்திரியைக் கூப்பிட்டுத் தன் நாட்டு எல்லையில் கோமுகி ஆற்றில் அணை போடும்படி உத்தரவிட்டான்.
11. கால நேரத்தைக் குறிப்பிட, கோயில்களிலும் அரண்மனையிலும் மணி அடிப்பது வழக்கம்.
12. கோமுகி இந்த நாட்டைக் கடந்து கீழ்த்திசையிலுள்ள நாட்டிலும் பாய்ந்து வந்தது.
13. மன்னன் உடனே கோமுகியின் அணையைத் தகர்த்தெறியும்படி உத்தரவிட்டான்.
14. பயத்தினால் ஒரு விநாடி ஒரு யுகம்போல் தோன்றியதால் மக்கள் நேரத்தைக் கவனிக்க முடியவில்லை.
15. மந்திரி அரண்மனையில் மணியடிப்பவனைக் கூப்பிட்டு ஒவ்வொரு அரைமணிக்கும் ஒரு மணியாகக் கணக்கிட்டு மணியடிக்கும்படி சொல்லிவிட்டார்.
16. ஊருக்குள் பெருகிய வெள்ளம் வடிந்து விட்டதால், மக்கள் மந்திரியின் மதியூகத்தைப் பெரிதும் பாராட்டினார்கள்.
17. அரை மணிக்கு ஒரு முறை மணியடித்துக்கொண் டிருந்தது.
18. ஆற்று ஜலம் போக வழியின்றி ஊருக்குள் வெள்ளம் புகுந்தது.
19. மன்னனும் துயிலெழுந்து மந்திரியைக் கூப்பிட்டு, ''மணி ஆறு அடித்துவிட்டதே! ஏன் கதிரவன் வெளிவரவில்லை?'' என்றான்.
20. மக்கள் மந்திரியிடம் முறையிட்டனர்.
21. மந்திரி மன்னனை நோக்கி, ''அரசே! நாம், கீழ்த்திசை நாட்டு மக்களுக்கு ஆற்று ஜலத்தைப் போகாமல் தடுத்துத் தேக்கி விட்டதால், அவர்கள் கிழக்குத் திக்கிலிருந்து வெளிவரவேண்டிய கதிரவனைப் பிடித்து வைத்துக் கொண்டுள்ளனர்'' என்று பதில் சொன்னான்.

—ஆர். என்.

விடை:

8, 2, 12, 5, 10, 3, 18, 20, 6, 1, 11,
15, 4, 14, 17, 9, 19, 21, 13, 7, 16.

Reg. No. M. 5542

புதிய கண்ணன் வெளியீடுகள்

ஏரிக்கரை மாளிகை

பாட்டி, ராஜா-ராணிக் கதைகள் சொல்வாள்; தாத்தா, மந்திரவாதி-வீரர் கதைகள் சொல்வார். எல்லாம் கேட்கக் கேட்க எங்கேயோ ஒரு தனி உலகத்துக்கு நம்மைக் கொண்டு சென்றுவிடும். ராஜகுமாரன் வருவான்; ராஜகுமாரி வருவாள். வீரன் வருவான்; வாள் கொண்டு சாகஸச் செயல்கள் எல்லாம் செய்வான். அற்புதத்தைச் சாதிப்பான். நாமோ ஆனந்தத்தில் மிதப்போம். அப்படிப்பட்ட கதைகள் நிறைந்த புத்தகம்தான் இது. அருமையான படங்கள் நிறைந்தது. 'ஜனு' எழுதியது.

விலை 8 அணு

விளையும் பயிர்

கி. வா. ஜகந்நாதன் எழுதியது

நம்மிடையே வாழ்ந்த, வாழுகின்ற பெரியோர்கள் உங்களைப் போலிருந்த காலத்தில் எப்படி விளையாடினார்கள்? என்ன என்ன குறும்புத்தனங்கள் செய்தார்கள்? காந்திஜி, நேருஜி, டாகுர், பாரதியார், ராஜேந்திரப் பிரஸாத், ஆஸாத், டாக்டர் சாமிநாதையர் முதலிய பெரியார்களுடைய விளையாட்டுப் பருவத்து நிகழ்ச்சிகளைக் கதைபோல ஆசிரியர் வர்ணிக்கிறார்.

விலை 8 அணு

விஞ்ஞானம் பேசுகிறது

ஆசிரியர்கள்:

பே. நா. அப்புஸ்வாமி, ஜே. பி. மாணிக்கம்

நாம் தினசரி பல பொருள்களை உபயோகப் படுத்துகிறோம். அவை எப்படி வேலை செய்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா? மொத்தம் 12 பொருள்களைப்பற்றி இதில் சித்திரங்களாக விவரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தினம் அரைமணி செலவிட்டால் 12 நாட்களில் தெரிந்துகொண்டுவிடலாம்.

விலை 8 அணு

கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.

கண்ணன் காரியாலயம்

மயிலாப்பூர் :: :: சென்னை—4.